நம்நாடு

The 'Nam Nadu' A Tamil Daily. விலை
The Official Organ of the D. M. K. 13 காசு

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்பி

பதிவு எண் : எம். 6311 ★ சென்னை : திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 9 (22—4—67) சனி ★ கிறுவியது : 1953
மலர் 14—இதழ் 281 வெளியூர் : திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 10 (23—4—67) ஞாயிறு தொலைபேசி: 51331

கைத்தறியும் தி. மு. கழகமும்

"கைத்தறித் தொழிலுக்கு உதவும் வகையில், கூட்டங்களில், 'மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடைகளை அணியுங்கள்' என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னபொழுது பலர் கேலி பேசினர்; ஆனால் இன்றையதினம், எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கைத்தறித் துண்டை, மாலைகளுக்குப் பதிலாக அணிவிக்கிறார்கள்!

"இப்படிக் கூட்டங்களில் மாலைக்குப் பதிலாகக் கைத்தறித் துண்டுகளை அணிவிப்பதால், கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்பதால் அல்ல; கைத்தறித் துணிகள் அணியப்படுவதைப் பார்க்கும் பொழுதெல்லாம், 'கைத்தறித் துணிகளுக்கு நாளும் ஆதரவு காட்டிடவேண்டும்' என்ற உணர்வை மக்களிடம் பரப்பும் என்பதால்தான்!

"கடந்த வாரம் டில்லியில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டேன்; அக்கூட்டத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன; எனக்கு மட்டும் கைத்தறித் துணி அணிவிக்கப்பட்டது; 'ஏன் அவருக்கு கைத்தறித் துணி அணிவித்தீர்கள்?' என்று கேட்ட பொழுது, 'அண்ணு துரைகளுக் கைத்தறித் துண்டுதான் பிடிக்கும்' என்றார்கள்!

"இதிலிருந்து தி. மு. க. எதற்கு ஆதரவு காட்டுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்."

—முதலமைச்சர் அண்ணு
(சென்னை கைத்தறி பொருட் காட்சியில்)

★ காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்றாக இருக்கவேண்டும் என்பது விளம்பரப் பேச்சுக்காகவா? ★ அரசியல் சட்டத்தில் வழிகாட்டும் தத்துவமான மதுவிலக்குக் கொள்கை மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுவானேன்? ★ மூப்பது கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்திக்கொண்டு காந்திய நெறியில் செல்லும் தமிழ்நாடும் — குடிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் மாநிலங்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கலாமா? ★ அறத்தின் அடிப்படையில் தமிழகத்திற்கு இந்தியப் பேரரசு இழப்பீட்டுத் தொகை தர வேண்டாமா? ★ இந்தியத் தூதரகங்கள் அந்நியநாட்டுச் சதையை கைதறிக்கு ஏற்படுத்துவதில் அக்கறை காட்டாதது ஏன்?

மாநிலங்கள் மதுவிலக்கை நீக்க முன்வருவதும் விசைத் தறியைப் பரப்புவதும் இந்தியப் பேரரசு செய்யும் அக்கிரமத்தின் விளைவே!

ஒற்றுமை பேசிவிட்டால் போதுமா? ஊறு விளைவிக்கும் நிலைகளைத் தடுக்கக் கூடாதா?

கைத்தறி நெசவாளர்கள் கண்ணீரைத் துடைக்க ஏற்றுமதி அதிகரிக்கவேண்டும்

வெளியிலிருக்கும்பொழுதே கைத்தறிக்கு ஆதரவு காட்டிய நாங்கள் அரசு உரிமை ஏற்ற பிறகு ஆதரவு காட்டாமலிருப்போமா?

கைத்தறிவார விழாவில் முதலமைச்சர் அண்ணு முழக்கம்

சென்னை ஏப். 22

"காஷ்மீர்முதல் கன்னியாகுமரிவரை ஒன்றுபட்டு, கைத்தறித் தொழில் வாழவைக்க வேண்டும் என்கிறார்கள். இதுபோன்றவற்றில்கூட, காஷ்மீர்முதல் கன்னியாகுமரிவரை ஒன்றாக இருக்க முடியவில்லை!

"ஒவ்வொரு மாநிலங்களும் விசைத் தறிகள் வேகமாகப் புகுத்தப்பட்டு வருகின்றன. அண்டை மாநிலங்களில் விசைத் தறிகள் பரவி வரும்பொழுது தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு தலைதூக்கி நிற்கமுடியுமா?

"இந்தியாவிலேயே மதுவிலக்கு வெற்றிகரமாக நடைபெற்றுவரும் மாநிலம் தமிழ் நாடுதான். தமிழ்நாட்டில் நல்ல முறையில் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது.

"ஆனால், கல்லிலே செய்தித் தூண்களிலே படித்தேன்—'ஆந்திரத்தில் கள்ளுக் கடைகள் திறக்கப்படும்' என்று! அதற்கு முன்பு, 'கேரளத்தில் மதுவிலக்கு தளர்த்தப்படும்' என்று செய்தி வந்தது! அதற்கு முன்னர், 'பம்பாயிலே பீர்க் கடைகள் திறக்கப்படுகின்றன' என்று செய்தி வந்தது! 'பீகாரில் ஒரு பகுதி முழுவதிலும் மதுவிலக்குக் கிடையாது' என்று செய்தி வந்தது!

"இந்தச் செய்திகளைப் படிப்போருக்கு, 'அண்டை மாநிலங்களில் மதுவிலக்கு நீக்கப்படுவதால் நம் மாநிலத்திலும் நீக்கப்படும்' என்று நினைக்கவும், மறந்து இருப்பவர்களைத் தூண்டிவிடுவதாகவும் இருக்காதா?

"விசைத் தறிகள் புகுத்தப்படுவதும், மதுவிலக்கு விதிகள் தளர்த்தப்படுவதும், முழுக்க முழுக்க இந்திய அரசின் அக்கிரமான போக்கையே எடுத்துக் காட்டுகிறது!

"தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமுலில் இருப்பதால், ரூ. 30 கோடி இழப்பு ஏற்படுகிறது. மூப்பது கோடி ரூபாய் இழப்பு ஏற்படலாகாதும் 8 கோடி மக்களின் மனிழ்ச்சி தழைக்கவும், தருமம் நிலைக்கவும், ஒழுக்கம் உயரவும் மதுவிலக்குப் பயன்படும் என்று நம்புகிறோம்.

"ஆனால், அண்டை மாநிலங்களில் மதுவிலக்கை எடுத்துவிட்டால், தமிழகத்தில் மதுவிலக்கை ஒழுங்காக அமுல் நடத்த முடியுமா?

"இந்த நிலையில், 'காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரை ஒன்று' என்று பேசுவது, வீரமாக காலப் பேச்சாக இருக்கலாமே தவிர, விவரத்துக்குரிய பேச்சாக இருக்க முடியாது!

"இந்திய அரசியல் சட்டத்தில், மதுவிலக்கு, 'வழிநடத்தும் தத்துவ'மாகத்தான் சொல்லப்படுகிறது; இருந்தும், மதுவிலக்கு தளர்த்தப்படும் அக்கிரமத்திற்கு இந்திய அரசு உடந்தையாக இருந்துவருகிறது! இந்த நிலையை மாற்றிடவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன்"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், 13-வது அனைத்திந்தியக் கைத்தறி வார விழாவையொட்டி சென்னையில் நடைபெற்ற கைத்தறி பொருட் காட்சியில் உரையாற்றுகையில் விளக்கிக் கூறினார்கள்.

அந்தத் தூதுவரகங்களில் பணியாற்றுவோர் — வணிகத் தொடர்புக்காக இருக்கும் அதிகாரிகள், நம்முடைய கைத்தறித் துணிகளுக்குச் சந்தை தேடித் தரவேண்டும்.

நான் வெளிநாடுகளுக்குச் சென்றபொழுது, அதுவரகங்களில் பணியாற்றுபவர்கள் கைத்தறி ஆடைகளை அணிந்திருக்குதாக என்னிடம் கூறினார்கள்; அவர்கள், வெளிநாட்டு ஆடைகளையே அணிந்திருந்தார்கள்; சிலர், 'தேசிய உடை' என்ற காரணத்தையே அணிந்திருந்தனர்; ஆனால், யாரும் கைத்தறி ஆடைகள் அணியவில்லை!

வெளிநாடுகளில் உள்ள அதுவர்களும், வாணிக அதிகாரிகளும், கைத்தறி ஆடைகளின் கோர்த்தியை எடுத்துக் காட்டும் அளவில் கைத்தறித் துணிகளை அணியவேண்டும்.

வெளிநாடுகளில் கல்வி முறைகளில் கைத்தறித் துணிகளுக்கு விளம்பரம் செய்ய வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

கைத்தறித் துணிகளுக்கு நல்ல சந்தை கிடைக்க 'நம் முடைய' மந்திரி சபைக்கூட்டங்களில் இதுபற்றி ஒப்பொழுது கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு இருக்க!

உலகமெங்கும் நம்முடைய நாட்டின் தூதரகங்கள் இருக்கின்றன; வாணிக அமைப்புகள் உள்ளன; இவைகளுக்காக நாம் கோடி கணக்கில் பணத்தைச் செலவழித்து சின்றோம்.

இவைகளில் இந்தப் பக்கம் வருபவர்கள்தான்! கைத்தறி நெசவாளர்களின் அப்பொழுது மக்களின் நிலையையும் விரும்பத்தையும் உணர்ந்து ஆடைகளைத் தயாரிக்கிறார்கள்.

நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளி பொங்கச்செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை என்பதை இந்தச் சர்க்கார் மறக்கவில்லை!

புதிய சர்க்கார், கைத்தறி நெசவாளர்களின் சங்கடங்களை உணர்ந்து உணரும்!

வெளியிலே இருக்கும் பொழுதே கைத்தறித் தொழிலை ஆசரித்த நாங்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு ஆதரவு காட்டாமல் இருப்போமா?

இந்தச் சர்க்கார் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு உதவும்!

கைத்தறித் தொழிலில் ஏற்பட்டிருக்கும் இடர்பாடுகளுக்கு நான்கு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன :—

1. நூல் விலை ஏற்றம்.

2. சாய வகைகள் அந்நிய நாடுகளிலிருந்து கைக்கூலி தரவேண்டும். வேறு இக்கலிலிருந்து கைக்கும் சாமான் விலை ஏறி வுள்ளன.

3. கைத்தறி நெசவில் ஈடுபட்டிருப்போர்களுள் பலருக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு இல்லை.

4. ஏற்றெந்த நாடுகள் நம் முடைய கைத்தறித் துணியை இறக்குமதி செய்தாலே அவைகள் கதவைத் தாழிட்டுக் கொண்டன.

இவைகளைத்தான் கைத்தறித் தொழிலில் வரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஒருகாலத்தில் கைத்தறித் துணிகளை ரோமாபுரி மக்கள் விரும்பினர்; ஆனால், இன்று கைத்தறித் துணிக்கு 10 காசு—15 காசு தள்ளுபடி கொடுத்து சந்தை தேட வேண்டியிருக்கிறது! உலகில் முன்பு நமது கைத்தறித் துணிக்கு கிராக்கியும் செலவுமிருந்த இடங்களில், இப்பொழுது கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு இல்லை!

உலகெங்கும் நம்முடைய நாட்டின் தூதரகங்கள் இருக்கின்றன; வாணிக அமைப்புகள் உள்ளன; இவைகளுக்காக நாம் கோடி கணக்கில் பணத்தைச் செலவழித்து சின்றோம்.

அந்தத் தூதுவரகங்களில் பணியாற்றுவோர்—வணிகத் தொடர்புக்காக இருக்கும் அதிகாரிகள், நம்முடைய கைத்தறித் துணிகளுக்குச் சந்தை தேடித் தரவேண்டும்.

நான் வெளிநாடுகளுக்குச் சென்றபொழுது, அதுவரகங்களில் பணியாற்றுபவர்கள் கைத்தறி ஆடைகளை அணிந்திருக்குதாக என்னிடம் கூறினார்கள்; அவர்கள், வெளிநாட்டு ஆடைகளையே அணிந்திருந்தார்கள்; சிலர், 'தேசிய உடை' என்ற காரணத்தையே அணிந்திருந்தனர்; ஆனால், யாரும் கைத்தறி ஆடைகள் அணியவில்லை!

வெளிநாடுகளில் உள்ள அதுவர்களும், வாணிக அதிகாரிகளும், கைத்தறி ஆடைகளின் கோர்த்தியை எடுத்துக் காட்டும் அளவில் கைத்தறித் துணிகளை அணியவேண்டும்.

வெளிநாடுகளில் கல்வி முறைகளில் கைத்தறித் துணிகளுக்கு விளம்பரம் செய்ய வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

கைத்தறித் துணிகளுக்கு நல்ல சந்தை கிடைக்க 'நம் முடைய' மந்திரி சபைக்கூட்டங்களில் இதுபற்றி ஒப்பொழுது கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு இருக்க!

உலகெங்கும் நம்முடைய நாட்டின் தூதரகங்கள் இருக்கின்றன; வாணிக அமைப்புகள் உள்ளன; இவைகளுக்காக நாம் கோடி கணக்கில் பணத்தைச் செலவழித்து சின்றோம்.

இன்று சொல்லும்பொழுதே 'நம்முடைய' மந்திய சர்க்கார் என்று சொல்லும் காரட்டிச் சொன்னேன்.

மத்திய சர்க்காருடன் எல்லைப் பிரச்சினைகளிலும் மாதல் கள் ஏற்படுத்திக்கொள்வேன்

(8-ம் பத்தி காண்க)

தாய்மார்களுக்கு நன்றி!

"கைத்தறித் துணிகள் இந்த அளவுக்கு நம் காட்டில் விற்கப்படுகின்றன என்றால், அதற்குக் காரணம், நம்முடைய தாய்மார்கள்தான்!

"தாய்மார்கள் இன்னும் கைத்தறித் துணிகளே மறந்துவிடவில்லை. வழிவழியாக இதற்குமும் பண்புடன் கைத்தறித் துணிகளை ஆசரித்து வருகின்றனர்.

"ஆடவர்கள் ஆதரவாக ஆடைகளிலும், கட்டவ் துணிகளிலும் கவனம் செலுத்துகின்றனர்.

"நம்முடைய தாய்மார்கள், காஞ்சிபுரத்தையும், கும்பகோணத்தையும், அம்மாபேட்டையையும், சேலத்தையும் இன்னும் மறந்துவிடவில்லை!

"அப்படித் தாய்மார்கள் மறந்து இருப்பார்களேயானால், தமிழகத்திலே வாழும் நெசவாளர்கள், சென்னை நகரத்தின் சாலைகளிலே குடியிருப்பார்கள்!

"அந்த நிலையை உண்டாக்காமல் கைத்தறித் துணிகளை ஆசரித்தும் தாய்மார்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொடர்ந்து கைத்தறித் துணிகளை ஆசரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

—முதலமைச்சர் அண்ணு
(சென்னை கைத்தறிப் பொருட்காட்சியில்)

கிரேக்கத்தில் இராணுவ ஆட்சி

இலண்டன், ஏப். 21—கள்ளிரவு நேரத்தில் கிரேக்க நாட்டின் ஆட்சியை இராணுவம் ஏற்றது.

நாடாளுமன்ற சனநாயக முறையில் இயல்வந்த கிரேக்கத்தில், கடந்த மாத இறுதியிலிருந்து அரசியல் குழப்பம் ஏராத தொடங்கியது. நிலைமையைச்சர் கான்ஸ்டேன்டின் அமைச்சரவை 3-மாதங்காக ஆட்சி புரிந்துவிட்டு, பதவியிருந்து விலகியது.

பிறகு கூட்டு அமைச்சரவை அமைக்கும் என்னத்தோடு மன்னர் கான்ஸ்டைன், நாடாளுமன்ற அரசியல் கட்சிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். 300 உறுப்பினர்களைக் கொண்ட கிரேக்க நாடாளுமன்றத்தில் 122 உறுப்பினர்களைக் கொண்ட கட்சித் தலைவரும், முன்னாள் நிலையமைச்சருமான ஜியார்ஜ் பாபான்ரூ, அம்மாநாட்டைப் புறக்கணித்தார்.

அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்ட உடன்பாடும் ஏற்படவில்லை.

இப்போது இராணுவ ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகிறது.

தைரியம் உண்டா?

"இந்திய சாசியல் சட்டத்தில், மதவிலக்கு, எதிர்கட்சித் செல்வம்படுத்தி, நத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

"தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தின் மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளதாக உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள்; அப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள்—அதற்கு முரணாக நடந்துகொள்ளத் துணிவார்களா?

"நந்திய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குவோர், அரசியல் சட்டத்தில் வழிப்பட்டு நத்துவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள்; அப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள்—அதற்கு முரணாக நடந்துகொள்ளத் துணிவார்களா?

"நந்திய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குவோர், அரசியல் சட்டத்தில் வழிப்பட்டு நத்துவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள்; அப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள்—அதற்கு முரணாக நடந்துகொள்ளத் துணிவார்களா?

"நந்திய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குவோர், அரசியல் சட்டத்தில் வழிப்பட்டு நத்துவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள்; அப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள்—அதற்கு முரணாக நடந்துகொள்ளத் துணிவார்களா?

"நந்திய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குவோர், அரசியல் சட்டத்தில் வழிப்பட்டு நத்துவதாக உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள்; அப்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள்—அதற்கு முரணாக நடந்துகொள்ளத் துணிவார்களா?

தீண்டாமைக் குற்றம் புரிந்தவர்கள் தேர்தலில் நிற்பதற்குத் தடை

அரசு நியமித்த குழுவின் பரிந்துரை

புதுடில்லி, ஏப். 22—

"தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை பெற்றவர்கள், சட்டமன்ற—நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட முடியாமல் தடை விதிக்க வேண்டும்; அரசு நிறுவனங்களிலும், உள்ளாட்சித் துறை நிறுவனங்களிலும் அவர்களுக்கு வேலை தரக் கூடாது"

என்று அரசாங்கம் நியமித்த தீண்டாமை ஒழிப்புத் தொடர்பான குழு பரிந்துரைத்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு காள்வாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 68 கோடியை ரூ. 200 கோடியாக உயர்த்த வேண்டும் என்றும் அக்குழு வற்புறுத்தியுள்ளது.

தேர்தலில் சேர்ந்த பிறகு பதவி உயர்வு தொடர்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென்று இடம் ஒதுக்கவேண்டும்; தகுதி அடிப்படையைத் தளர்த்தவேண்டும்" என்றும் குழு சோசன கறியுள்ளது.

இராணுவ ஆட்சி

சீனுவில் 26 மாசிமக்கள் உளளன; அவர்களில் 10 மாசிலங்களில் இராணுவ ஆட்சி கடைபெறுவதாக ஜப்பானிய இராணுவ எடுகள் அறிவித்துள்ளன.

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

என்று சிலருக்கு ஐயப்பாடு இருந்தாலேயே அப்படிக் கூறினேன்.

காங்கரசு நெசவு நர்சித் தமிழகத்தில் 30 சேட்கள் பேர் வழ்ந்துகொண்டிருக்கிர்கள்—இதில்—தையைப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்! அவர்களின் குறைபாடு களைப் போக்க நமிழர் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

'பைல்'கள் கடத்தப்பட்டதும் அழிக்கப்பட்டதும் சரியான செயல்தானாம்

மத்திய அமைச்சரின் வித்தைமிக்க வாதம்

புதுடில்லி, ஏப். 22—காங்கிரசுக்கார அமைச்சர்களால் பதவியேற்ற மாநில களில் இருந்து பல 'பைல்'கள் நத்திய அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன.

சேற்று எங்காவது, சீபார் போன்ற மாநிலங்களில் இச் செயல் நடைபெற்றது.

தமிழகத்தில் பத்தாண்டுகள் நின் உத்தரவால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் சம்பந்த 'பைல்கள்' அழிக்கப்பட்டன.

இச்செயல்களால் அண்மை யில் டில்லியில் கடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கேள்விக் கணை தொடுக்கப்பட்டுக்கிறது.

அப்போது, 'இதுபற்றி அதிகம் வலியுறுத்தக்கூடாது' என்று மத்திய உள்துறை அமைச்சர் சவான் கூறினராம்.

"1917-ம் ஆண்டு 'பைல்'கள் பற்றிய சட்டம் இந்தி அலுவலர்களுக்கு நினைவு இருக்கிறது" என்று அவர் கூறினாராம்.

வி. கே. கிருஷ்ணமேனனுக்கு வெற்றி வாய்ப்பு

20 கூட்டங்களில் கி. மனோகரன் பெ. சீனிவாசன் பேசினர்

பம்பாய், ஏப். 22—வட கிழக்குப் பம்பாய் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வி. கே. கிருஷ்ண மேனனுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரச்சாரம் செய்யச் சென்றிருக்கும் காஞ்சி வி. மனோகரன் எம்.பி.-யும், பெ சீனிவாசன் எம்.எல்.ஏ.-யும் ஏறத்தாழ 20 கூட்டங்களுக்குமேல் பேசினர்.

வி கே. கிருஷ்ண மேனனின் வெற்றி வாய்ப்பு மிகுந்த பிரகாசத்துடன் இருப்பதாகப் பம்பாய் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் 12 ஆண்டுகள்வரை இந்தியாவில் வாழ்க்கைத்தரம் உயராது!

அமைச்சர் அசோக் மேத்தா சொல்கிறார்

"இன்னும் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளில், இங்கிய மக்களின் வாழ்க்கைத்தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துவிட முடியாது" என்று திட்டத்துறை அமைச்சர் அசோக் மேத்தா தெரிவித்தார்.

கிழக்கு ஜெர்மனியின் வாஜெலி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அசோக் மேத்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இப்பொழுதான இந்திய மின் பொருளாதார நிலவரமான பணவீக்கத்தை முதலில் செய்யத்தான் வேண்டும்; இதி லிருந்து உடனடியாக பயன் கள் எதிர்பார்க்க முடியாது" என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்ட இறுதியில், நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சன்பந்தம் என்பவர் கூறினர்.

தீக்கதிர்

தலைவர்: இரா.செழியன்எம்.எஸ்.சி.

நிருபர்களுக்காண்டு 1998 தெற்றை 9 (22—4—67) சனி

கல்வி அமைச்சரின் எச்சரிக்கை

இந்திய அரசாங்கத்தில் கல்வித்துறை இராஜ்ய அமைச்சராக பரன்ஜ் ஜி ஆசார் என்பவர் இருந்து வருகின்றார். பீகார் இந்தி சாகித்திய சம்மேளன்தின் சார்பாக இந்த அமைச்சருக்கு ஒரு மாபெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வரவேற்பின்பொழுது, தமது உள்ளத்தில் பற்றியெரிக்துக் கொண்டிருக்கின்ற இந்தி மொழி வெறியை அவர் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்.

தனி நபர் என்ற நிலையில், தாய் மொழியின்மீது கொண்டிருக்கக்கூடிய மற்றவரோ அல்லது பெரியவரோ, மகவத் ஜி ஆசார் வெளியிட்டிருக்கும்படிக்கத்தில், அவைப் பற்றி எவரும் பொருட்படுத்தமாட்டார்கள். இந்தி மொழி வெறியர் வட்டிலில் ஆசாரவையும் சேர்த்துக் கணக்கிட்டுக் கொள்ளுகின்ற அளவுக்கு, அவருடைய மொழி வெறியை அலட்சியம்படுத்தி விடுவர்.

'சாதாரண குடிமகன்' என்ற நிலையில், இப்பொழுது அவர் இல்லை. இன்று அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பதவி, மோறுப்பு மிக்க கல்வி அமைச்சர் பதவியாகும். எனவே, கல்வித்துறை பற்றியும், மொழிதறை பற்றியும் அவர் வெளியிடக்கூடிய கருத்து எதுவாக இருந்திடினாலும், அது, இந்த நாட்டு மக்களுக்கு நேரடியுடைய ஒன்றாக என்ற காரணத்தால், அது குறி, நல்ல கவனியுடன் கூர்ந்துநோக்கப்பேண்டியதாகிறது.

கல்வி அமைச்சர் பதவியிலிருக்கின்ற அவர், தமக்குள்ள இந்தி மொழி வெறியை, வெளிப்படையாகக் கூறியிருப்பது ஒரு எனது வருத்தமும், அதைவிடப் பெருந்தவறு ஒன்றை அவர் செய்திருக்கின்றார். அத்தவற்றை மறப்பதற்கும் இல்லை—மன்னிப்பதற்கும் இல்லை.

இந்திய அரசாங்கத்தில் கல்வித் துறை அமைச்சராக இருக்கின்ற ஒருவர், அந்த அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைநிய அனைத்து உண்மைகளையும் தெளிவாகத் தெரிந்திருக்கவேண்டும். அவ்வித தெரிந்திருந்தாதான், அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு முரண்படாத முறையில், கல்வி அமைச்சரால் பேச முடியும்.

ஆனால், கல்வி அமைச்சராக இருக்துவரக்கூடிய நமக்கு, இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற மொழிக் கொள்கை அதனை தெரியாதெனபதை, இந்தி—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழி மற்றியும் வெளியிட்டிருக்கின்ற கருத்தின் மூலம், மகவத் ஜி ஆசார் பெய்படியிருக்கின்றார். அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற மொழிக் கொள்கையற்றை உண்மையைத் தெரிந்துகொள்ளாத நிலையில், மகவத் ஜி ஆசார் கல்வி அமைச்சராக இருப்பது ஏனது விபரீதமிப்பாக உள்ளது.

பீகார் இந்தி சாகித்திய சம்மேளனத்தைக் அளித்த வரவேற்பில், விடையளித்தக்க முறையில் மகவத் ஜி ஆசார் கூறியுள்ளது என்ன ?

"ஆங்கில மொழி தொடர்ந்து இருப்பதற்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டுமே; இந்தி—வின் தேசிய மொழியான இந்தி மொழி அனைத்துத் துறையிலும் வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற முயற்சிக்கவேண்டும்" என்பதான, அவ்வாறேபேசிய, அமைச்சர் வெளியிட்டிருக்கின்ற கருத்தாகும்.

இந்தி மொழியின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும், கல்வி அமைச்சர் காட்டியுள்ள அக்கறை, அருமையை தாய் மொழிப் பற்றுக்கு தர்க்தோர் எடுத்துக்காட்டாகும்.

இந்தி மொழியின் ஆக்கத்துக்கு முயற்சிப்பதனால், கல்வி அமைச்சர் என்ற முறையில் தமக்குரிய கடமையாற்றுகின்றோம் என்றுகூட அவர் தீர்மானித்துக்கொள்ளலாம். ஆனால், 'ஆங்கில மொழி [illegible] இருக்குவதற்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டும்' என அவர் அறிவித்திருப்பதனால், இந்தி மொழி ஆசை மக்களுக்கு அச்சத்தையும் கவலையையும் தருவதாக அமைந்திருக்கிறது.

ஆங்கில மொழி தொடர்ந்து இருப்பதற்கு எதிராக இந்த இராஜ்ய கல்வி அமைச்சர் போர் தொடங்குவது எப்படியோ இருக்கட்டும்; ஆங்கில மொழி தொடர்ந்து இருந்துவருவதற்காக 1963-ம் ஆண்டில் இயற்றப்பட்டிருக்கின்ற ஆட்சிமொழிச் சட்டத்தின் உள்ளடக்கத்தை உணர்ந்து கொண்டல்லவா இந்த அமைச்சர், ஆங்கிலத்துக்கு எதிராகப் போர் முழக்கம் செய்யத் துணியவேண்டும்?

1963-ம் ஆண்டு இயற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தின் உள்ளடக்கம் என்ன ? அம்மொழிக்கு எதிராக அமைச்சரின் போர் முழக்கத்தை அந்தச் சட்டம் எற்றுக்கொள்ளுகிறதா ? அத்தகைய போர் தொடுப்பதற்கான உரிமையை, அச்சட்டம், கல்வி அமைச்சர் பகவத் ஜி ஆசாருக்கு அளிக்கிறதா ?

ஆட்சிமொழிச் சட்டத்தின் உள்ளடக்கம், கல்வி அமைச்சர் மகவத் ஜி ஆசாருக்தின் போர் முழக்கத்தை ஒப்புக்கொள்வதாக இல்லை :—"அரசியல் சபைம் செயலைத் தவங்கிய 1950-ம் ஆண்டுக்கும் பின்னர், ஆங்கில மொழி பயன்படுத்தப்படுவதந்த மனிதன் அனைத்துக்கும் அம்மொழியைத் தொடர்ந்து பயன்படுத்தலாம்" என்றுதான் உள்ளது. இச்சட்டத்தில் இவ்வாறு பெற்றிருக்கின்ற 'மே' என்ற ஆங்கில சொல்லுக்கு பதிலாக, 'வேண்டும்' எனும் சொல்லைக்கூடிய 'ஷெல்' என்ற கட்டளைச் சொல்லைச் சேர்க்க வேண்டுமென்றால், மேற்படி சட்டம் இயற்றப்படவேயாது, காட்டுமன்றத்தில் வற்புறுத்தப்படாது. அப்படியும் நிலைமை அமைச்சர் மேரு அவர்கள், 'மே' என்ற ஆங்கில சொல்லில், 'ஷெல்' என்ற கட்டளைச் சொல்லும் உள்ளடங்கி இருக்கிறது—என, இந்தி பேசாத மக்களுக்கு உறுதி அளித்தார்.

இந்த விளக்கத்திலிருந்து, 1963-ம் இயற்றப்பட்ட ஆட்சி மொழிச் சட்டத்தின் உள்ளடக்கப்பட்டதாள், இந்திய அரசாங்கத்தின் நிரண்டு ஆட்சிமொழிகளின் ஒன்றுக ஆங்கில மொழியும், இன்று ஆட்சி மொழிகாக இருந்துவருகிறது. சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு, 'ஆட்சி மொழி' என்ற நிலையில் செயல்படுத்தப்படுவருகின்ற ஆங்கில மொழிக்கு ஆதரவு காட்டவேண்டியது—தாம் விரும்பியும் விரும்பாமற்போனலும்—கல்வி அமைச்சராக உள்ள வரையில்—மகவத் ஜி ஆசாரு அவர்களின் கடமையாகும். ஆனால் ஆசாரு அவர்களோ அக்கடமையை மறந்து, ஆட்சிமொழிச் சட்டத்தின் அதிகாரம் பெற்றுச் செயல்பட்டு வரக்கூடிய ஆங்கில மொழிக்கு எதிராகப் போர்முரசு எழுப்பியுள்ளார்! கடைத்தரப்பு மனிதர்களே மேற்கொள்ளுகிறார்!

ஆட்சி மொழிச் சட்டத்தின்படி மட்டுந்தான், ஆங்கில மொழியும் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்துவருகிறது என்பதினால், ஆங்கில மொழியை, 'மும்மொழித் திட்டம்' என்ற பெயரால் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது ஏட்டளவிலான இருக்கிறது என்பதில்லை; நடைமுறையில் இத்திட்டம் செயலாற்றப்பட்டும் வருகிறது.

ஆட்சிமொழிச் சட்டத்தை இன்னும் கல்வி அமைச்சர் அறிந்துகொள்ளாதிருக்கின்றார் என்றாலும், இந்த மும்மொழித் திட்டத்தையாவது அந்த அமைச்சர் தெரிந்துள்ளவராக இருக்க வேண்டும். இம்மும்மொழித் திட்டத்தையும் அறிந்திலாதவர் போன்றே கல்வி அமைச்சர், 'ஆங்கில மொழிக்கு எதிராகப் போர் தொடங்கவேண்டும்' என்கு கொக்கரிக்கின்றார்!

இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள ஆட்சிமொழிச் சட்டத்தையும், முன்மொழித் திட்டத்தையும் இந்தக் கல்வி அமைச்சர் தெரிந்தே இருக்கின்றார். இவ்விரண்டையும் தெரிந்திருந்தாலும் இவ்விரண்டு ஏற்பாடுகளையும் மீறி ஆங்கில மொழிக்கு எதிராகப் போர்முரசு எழுப்பின்றாரு துணிச்சலை, அருமையை உள்ளத்தில் புகைக்குகொண்டிருக்கின்ற இந்தி மொழி வெறி, தான்டுகளை அளித்துள்ளது. கல்வி அமைச்சரின் இப்போக்கினை, தங்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையாக இந்தி சோதமக்கள் தீர்மானித்துக் கொள்ளத் தவறக்கூடாது.

ம. ஈ.

ஆந்திரத்திலும் காங்கிரசு ஆட்சி ஆட்டம் காண்கிறது!

முதலமைச்சர் முயற்சி தோல்வியுறும்?

ஐகாபாத் ஏப் 21—

ஆந்திர மாநிலத்தில் முதலமைச்சர் பிரகுமான்ந்த ரெட்டி ஆட்சி, கவிழும் கட்டத்தை எட்டியிருக்கிறது!

எ சி. சுப்பா ரெட்டியின் கீழிருக்கும் 60 காங்கிரசுக்காரர்கள் அடங்கிய அதிருப்தியாளர் கோஷ்டி, கட்டை அமைத்துக் கொண்டு ஆட்சி மாறி ஜன காங்கிரசில் சேர்ந்து, எதிர்க் கட்சிகளுக்கு அசைக்கமுடியாத பெரும்பான்மையைக் கோவேக்த மிரிக்கொண்டிருப்பதால், இம்மாநிலக் காங்கிரசு ஆட்சி அழியும் கட்டம் வந்துவிட்டது என்று சகுரப்படுகிறது.

கமார் 70 ரேடங்கிய சுயேச்சை களிலிருந்து அமைக்கப்பட்ட 35 ரேடங்கிய மக்கள் சனாயகக் கட்சியின் ஆதரவு தனக்கு இருக்கிறது என்றுமோதிலும், அதிருப்தியாளரை இழுத்துப் பிடிப்பதற்காகச் சுப்பா ரெட்டிக்கு அமைச்சர் சதவியை பிரமானத்ரெட்டி கொடுத்து விட்டார்.

இச்சமேச்சைகளில் பெரும்பாலோர் மைய காங்கிரசுக்காரர்கள்; அவர்களுக்குச் சேர்த்து டிக்கெட்டு மறுக்கப்பட்டது; அவர்கள் சமது சொந்தச் செல்வாக்கினால் தேர்தலில் பெற்றிருக்கார். தங்கள் கிடைக்குமானால் ஆளுங் கட்சியில் சேர அவர்களில் பெரும்பாலர் ஆயத்தமாயிருக்கார்.

இங்கிலியில், அதிருப்தியாளர் கோஷ்டி மாறினாலும், எஞ்சியுள்ள 125 காங்கிரசுக்காரர்களையும், மக்கள் சனாயகக் கட்சியின் 85 உறுப்பினர்களையும் கைத்துக்கொண்டு பிருமானந்த ரெட்டி தனது பதவியை நீடிக்கமுடியும்.

இந்தக் காரணத்தினால்தான் அவர், அதிருப்தியாளரின் ஒரே ஒருவருக்கு மட்டும் அமைச்சரவையில் இடம் தர திருக்கமாம்; ஆனால் அதை ஏற்று அமைச்சரவையில் சேர்ந்து கொண்ட சுப்பா ரெட்டி, இப்போது தனது கோஷ்டிக்கு மேலும் இடம் வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார் என்று சகுரப்படுகிறது.

மேலும் அரசாங்க ஊழியர்களின் ஐந்து படியை மத்திய ஊழியர்கள் பெறும் அளவிற்கு உயர்த்துவது என்று தேர்தலுக்கு முன்னர் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றி ஞல், சமயசர் செலவிடம் ஆண்டுதோறும் ரு. 7 கோடி அதிகரித்துவிடும்.

இம்மாநிலத்தின் நிலவரி (லேவித்த மதிப்பீட்டுச் சமீ

விஞ்ஞானத் தொழில் நுட்பச் சொல்லகராதி

கல்வி சொற்கள் அரசாதி—சாதாரண அரசாங்கம்—பல்கலைக் கழகப் படிப்புக்கான நூல்கள் முதலியவை உள்பட 116 வெளியீடுகளை இதுவரை விஞ்ஞான தொழிநுட்பச் சொற்களஞ்சியம் பிரிவினர் குழு வெளியிட்டிருக்கிறது.

இந்தியின் மொழிபெயர்ப்பு முறையில் உள்ள குறைபாடுகளை நீக்கி, அவற்றை எளிமைப்படுத்தி, ஒரே சீரான முறையில் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடுவதற்காக இந்தச் சொற்களஞ்சியம் தயாரிக்கும் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு சொற்கள் ஒரு பொருளைத் தருவதாக இருக்கவேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு சொல்லுக்கும் பல சொற்களை ஆராய்ந்து, அவற்றுள் ஒன்றை தேர்ந்தெடுத்து, அதை அகராதியில் சேர்த்துள்ளனர்.

இந்தி மொழியில் ஆங்கிலச் சொற்களை அப்படியே எழுதுவதை தவிர்க்கவும், அவற்றுக்கு இணையான இந்திச் சொற்களை உருவாக்கவும் இந்த அகராதி பெரிதும் உதவும்.

சாயம் வெளுக்கிறது

"திருடா, திருடா" வா, வா! இன்றைக்கு எவ்வளவு திருடினாய்? திருட்டுப் பணத்தில் எனக்கு அமைய உனக்கு ஈராம் பார்! நேரே, இந்த உண்டியலிலே போட்டு விட்டுப் போ"

என்று திருடனிடம் வார்த்தைக் கேட்கிறது மத்திய அரசாங்கம்!

'இவர்களுக்கு எத்தற்கு மோசீஸ் இலகார ? கேத்துவிடலாமே!" என்று மேற்றார் அண்ணா அவர்கள், தேர்தலுக்கு முன்புரே மேசினார்கள்.

பொதுமக்களுக்கு அண்ணு பேசியதன் பொருள் புரிந்தது! ஆனால், இத்தப் பொல்லாத காங்கிரசுக்காரருக்குத்தான், செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று! அவர்கள் உணர்ச்சி மரத்துப் போயிருக்கது!

சொரணையுள்ள காங்கிரசுக்காரருக்கோ, அண்ணு சொன்னதைக் கேட்டு ஆத்திரம் தான் வந்தது!

ஆனால் கடந்தது என்ன ?

கள்ளப் வனத்தை வெள்ளம் பணம் ஆக்கிக்கொள்ளத் தேதி கொடுத்து, அதற்குள் வெளியிட்டால், 'எனக்கு 60— உனக்கு 40' என்று நேரம் பேசிய அரசாங் கத்தரப்பினயனம் எவ்வளவு?

அதையிட, 'பதுங்கிக் கிடக்கிற வனமே அதிமாக இருக்கிறது' என்பது இப்போது தான் தெரிகிறது!

காங்கிரசுக் சாயம் வெளுத்து கிறது—மன்னிக்கவும்—தவறி விட்டது! அதனால் இப்போது தான் தெரிகிறது!

காங்கிரசுக்காரர்களே, 'காங்கிரசின் சாயம் வெளுக்கிறது—மன்னிக்கவும்—தவறி விட்டது! அதனால் இப்போது தான் தெரிகிறது!

'காங்கிரசுக்குப் புத்துயிருட்ட வேண்டும்—புத வலிவு ஏற்றவேண்டும்' என்றெல்லாம் காளாரத திங்கமும் மொழிதாரு கொள்ளுமுடியும் மேரி வரும் திருவளர் எஸ். கே. பட்டில், இப்போது, திருடருக்குத் தூண் பேசுகிறார்!

அதுகூட, மொதுமக்களின் கன்னைகள் கருதி, காங்கிரசு ஆட்சியாளருக்கு கல்ல பேர் வாங்கித் தரத்தானும்!

பம்பாயிலே குடியிருப்புப் பிரச்சினை பொருக் தொலில்—உண்மைதான்; ஆனால் அது, இன்று நேற்று நிலையாயா ?

நின்னிரண்டு ருடங்களுக்கு முன்னே பம் பாய்க்குள் போனபோதும் நிலைமை அப்படித் தானே இருந்தது?

திருவாளர் பட்டில், கேட்டிருவர்களுக்குச் சுத்தேதம் தட்டாமல் இருக்கப் புள்ளிவிவரங் களைத் தூக்கு கொண்டுவந்து அமைத்துப் பொதுமன் பேசி இருக்கிறார்!

கடந்த 15 ஆண்டுகளில் 5,000 தொழிற் சாலைகள் பம்பாயில் தோன்றி இருக்கின்றன வாம். தொழிலகங்கள் துவக்கிட அனுமதி அளித்திடிட அரசு, தொழிலாளர் குடியிருப்பு கள்பற்றி அக்கறை காட்டியதில்லையாம். அரசாங்கம் செய்த தவற்றை நாடுசெய்ய வேண்டுமானால், 'ஐயா ஒரு திட்டம் வைத்திருக்கிறோம்; அது இதோ:—

"இலிமேன் மாலைப் காகத்தில் கொழில் கன்தி துவக்கிட அரசு அனுமதிக்கக் கூடாது' என்கிறார். உண்மை; ஒப்புக் கொள்ளலாம்.

மதித்தவனு ருக்கு பாலமுதம் மைத்தரைப் போல், அடுத்தது இது:—

"இருக்கிற வீட்டு நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமானால், அவ்வளவு சேருக்கும் வீடு கட்டித் தருகிற பொறுப்பு என்னுடையது. அவ்வளவு சேருக்கும் வீடு கட்டித் தருவேன்; ஆனால், 'ஏது அவ்வளவு பணம்? எங்கிருந்து வந்தது?' என்றுகேட்காதீர்கள்; 'யாருடைய பணம்' என்று தெரிந்துகொள்ள முயலாதீர்கள்."

திருடும் பயலுக்குப் புரம்டுக் குருக்கள் தூண் விலைத்தானதிரிதான்!

பரட்டில் என்ன சொல்லுகிறார் என்றால், 'தவ்வளவுக் கள்ளப் பணக்காரர்; ஆனால், உனக்கென்ன அக்கறை அதைப்பற்றி ? உனக்கு வேண்டியது வீடுதானே—கட்டித் தருகிறேன்—அவ்வளவுதான்; மீண் கதை எதற்கு? அரசாங்கம் யையானாரு நிலையில், அடியேன் கைகொடுக்கி தானே—அது போதாதா' என் கிறார்!

திருடனுக்குத் தோன்றும் கள்ளபுத்தி என்கிறார்களே—அது, திருவாளர் பாட்டீலுக் குத் தோன்றுகிறது!

கள்ளப் பணத்தை வெள் ளைப் பணம் ஆக்கிட முதலாளி களுக்கு வழி சொல்லிக் கொடுத்து வக்காலத்து வாங்குகிறார்—இந்த 'ஏழை மங்களாள்'! இவர்தான் காங்கிரசை ஆட்டிம்மைக்குள் கொள்ளைக் குழுவின் ஒருவர்!

'பம்பாயிலோன் கள்ளப்பணம் அத்தனை யும் முடங்கிக்கிடக்கிறது' என்று சொல்கிள் வந்தோமே, புகிக்கு ஆகாயத்துக்காக எதிரிக் குதித்தார்களே—இப்போது என்ன சொல்லுகிறார்கள் ?

"அவள் ஆட்சிக்கு வந்தால் காட்டை அடகு வைத்தான்; வன் ஆளும் நில ஏற் பட்டார், அந்த நாடிடம் காட்டிக் கொடுத் பான்; அவள் துரோகி—இவன் துரோகி" என்றெல்லாம் நிந்த நித்தம் உளறி வரும் காங் கிரசுக்காரர்களுக்குத்தான் இக்தச் செய்தி காணிக்கை!

மக்களுக்குத் தெரிந்து விட்டது—யார் துரோகி என்று! அவர்தான் தேர்தலில் மார்த்தோமே!

காங்கிரசுக்காரர்கள் தங்களுக்குத் தாங் களே புரிந்துகொள்ளுவார்களோ ?

துரோகக் கும்பல், காங்கிரசு மூலவர் குழாத்திலேயே இருக்து முன்பற்புள்ள செயல் படுகிறது!

—பூனன்

இந்திக்காரர்களுக்குப் பாதுகாப்பளிக்கவே அரசியல் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது

முன்று மொழிச் சுமையைப் பலரும் உணரத் தலைப்பட்டுவிட்டனர்

மொழிச் சிக்கலுக்கு விரைவில் தீர்வு காண்பதே நல்லது

20—4—67 'இந்' இதழில், 'ஆரியருக்கக் கடைம்' என்ற பகுதியில் வெங்கட்ராமன் என்பவர் எழுதியிருப்பதாவது:—

"மத்திய அரசின் ஆட்சி மொழிச் சட்டம் மற்றி ஏப். 14-ல் நீங்கள் தலையங்கத்தின் மூலம் விளக்கியிருந்தீர்கள்.

'ராசியல் சட்டத்தில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்ற இடத்தில், 'ஷெல்' என்ற வார்த்தை இருக்கவேண்டும்' என எழுதியிருக்தீர்.

'மே' என்ற வார்த்தை, இந்தி ஆதரவாளர்களுக்குப் பாது காப்புத் தருவதற்காக உரு வாக்கப்பட்டதாகும்.

மொழிச் சிக்கலின் மல கோணங்களையும், இச்சிக்க லில் சிறைபட்டுத் தவிக்கும் சமுதாயத்தின் ஒரு பகுதி மக் களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள், தெளிவாக முடிவுக்கு வரமாட்டார்கள்.

செங்கல்பட்டில் மல்லிக்கழகத் தலைவராகப் போகத், 'மும் மொழித் திட்டம், ஒருவரையும் தம்பிச் செல்லவிடாத திட்டம்' என்று கூறியுள்ளார்.

முன்னுள் மல்லிக்கழகத் தலைவர்தரும், தற்போ தைய மத்திய அரசின் கல்வி யமைச்சருமான திரிகுன சென், 'இத்திட்டம், சிறுவர் களுக்குப் இழுஞ்சையாக அமைத்துவிடும்' என்று கூறியுள்ளார்.

உத்தரப் பிரதேசத்திலுள்ள ஒரு முழுக்தையைத் தமிழ்ப் பேசுக வேண்டுமென்று வற் புறுத்தக் கூடாது.

அதேபோன்று, தமிழ்நாட்டுக் முழுக்தை ஒன்று, தனது தாய்மொழியல்லாத இந்தி யைப் படித்துத் தீரவேண்டு மென்று வற்புறுத்தவும் கூடாது.

இந்தி தேசம் மாலிலங்களில் உள்ள சிலர் கூட, ஆங்கிலத் தின் தேவையை உணரத் தொடங்கியிருக்கின்றனர்.

ஆங்கிலத்தை வெறுப்வர் கள், தங்கள் முழுக்தை ஆங்கிலப் பள்ளிக்கு அனுப் பும் விக்தையில், ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்ற வாதி டுவோர் சுயபடிக்காட்டியிருக் கின்றனர்.

கலாச்சாரம்—ரண்டாவது என்னது, நாட்டின் ஒரு ஐக் கம்; அதன் மறுக்கமான முழுமையற்ற அமைதி நிலையை எண்ணி ஆங்கிலம் நீடிப்பதற் காகப் பாடுபட வேண்டும்.

புதிய அரசு மாற்றங்களால் மொழிச் சிக்கல் சில ஆண்டு களுக்கு தீவிரமாக்தான் விளா திக்கப்படும். விரைவில் அவ் விவாதம் முடிவு எதிர்காண் போம்.

ஏழைமக்கட்கே குறைந்த விலையில் உணவுப் பொருள்கள்

உயர் வருமானக்காரர்களுக்கு வழங்குவது நிறுத்தப்படலாம்

மேற்கு வங்க அரசின் நோக்கம்—உணவு அமைச்சர் விளக்கம்

"நேற்று மக்கத்தில் உண வுப் பஞ்சி அழிக்ச உள்ள பகுதிகளில் மாநகராளர் கட்டுமானங்களுக்கு அரசு வழங் கும் தானத்த மீண் உணவுப் பொருள்களை நிறுத்த வேண்டிய நிலை"

என்று, வங்க உணவு அமைச்சர் கருத்தறிவித்தார்.

பங்கீட்டுப் பகுதிகளில் வாழும் வருமான வரி கட்டு வோர் தொகை ஏறக்குறைய 4,20 000 ஆகும்.

செய்தியாளர்களிடம் பேசுகை யில் அமைச்சர் மேலும் குறிப் பிட்டதாவது:—

"உயர்க்த வருமானக்காரர் கள் எக்த விலை கொடுத்தும் பொருட்களை வங்க முடியும். ஆகையால் அவர்களின் உணவுக்காக அரசு மான உதவி தேவையில்லை என்று கருதுகிறேன். ஆயினும் இதுபற்றி எவரித இறுதி முடிவும் இதுவரை எடுக்கப் படவில்லை.

"மக்கட்டுப் பகுதிகளில் விநியோகிக்கப்படும் உண வுப் பொருட்களில் 75 சத விகிதம், இறக்குமதி செய்யப் பட்டதாகும் என்ற உண்மை, உனவு உற்பத்தியில் தன் னிறைவு பெறவேண்டியதன் அவசியத்தை விரைவுபடுத்து கிறது"

என்று, அமைச்சர் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டது.

44 எழுத்துகளில் ஆங்கிலம்!

விரைந்து கற்க புதிய நெடுங்கணக்கு!

பிரிட்டனில் சுமார் 2,000 பள்ளி களிலுள்ள குழந்தைகள் தமது பெற்றோருக்குப் புதிய எளிய, பரந்துபட்ட விளங்கிக்கொள்ள முடியாதனவும் ன புதிய நெடுங் கணக்கு ஒன்றை எளிதாகத் தரவும் ஆங் கில மொழியைக் கற்கவும், எழு தவும் கற்று வருகின்றனர்.

இந்நெடுங்கணக்கில் 'தியு' 'எல்' என்ற எழுத்துக்கள் இல்லை.

ஆங்கில மொழியில் 26 எழுத் துக்களைக் கொண்ட நெடுங்கண க்குத்தான் இருக்கிறது; ஆனல் இப்புதிய நெடுங்கணக்கில் 44 எழுத்துக்கள் உள்ளன.

இருப்பினும், இந்நெடுங்கண க்குக் கற்பிக்கப்படும் பிள்ளைகள், மூன்றுமாதங்களில் தெளிவாகப் படிக்கக் கற்றுவிடுகின்றனர் என றும், இது மற்றக் குழந்தைகள் படிக்கக் கற்கும் காலத்தை விட ஆறு மாதம் குறைவு என்றும் இவ்வின்ன பல்லிக்கட்ட சமய ஆசிரியர் குழு ஒன்று விரித் துள்ள அறிக்கை கூறுகிறது.

"வழக்கிலுள்ள எழுத்துக்கள் புதிதாகக் கற்கவேண்டிய தேவை யற்ற சுமையை ஏற்கின்றன" என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆங்கில மொழியிலுள்ள 40 ஒலி ரீன் இன்டாயிரத்திற்கும் அதி மான வழிகளில் எழுதவும், ஒலிக் கவும் முடிகிறது என்பதால், புதிய வரிவடிவங்கள் தோன்றியுள்ளன. புதிய நெடுங்கணக்கில் ஒவ்வோர் எழுத்திற்கும் ஒரளவு ஒலிகளைக் கொடுத்துப் புதிதாகக் கற்பவர் களுக்கு உச்சரிப்பில் ஏற்படும் முரண்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

மின்சாரத் துறையில் தொழில் நுட்பம் பயிற்சி

15,000 பேர்களுக்கு வளிக்கத்தம்பு

இங்காட்டில் மேற்கொள்ளப்படும் மின்சாரத் திட்டங்களுக்கு ஏராளமான மனிதர்கள் தேவைப்படுவதால், மின்சாரத் துறையில் தொழில் நுட்பம் பயிற்சி பெறுவதற்காக 15,000 தொழில் நுட்ப வல்லுனர்களுக்கும் பயிற்சி வழங்குவதற்கான திட்டம் ஒன்றை மின்சாரத் துறை இப்போது வகுத்துள்ளது. மின்சாரத் துறை இப்போது இருதி வடிவில் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

வடகிழக்குப் பகுதியில் மற்றொரு தனி நாடு கிளர்ச்சி

'சின்'மலைவாசிகள் 'சின்லாந்து' கோரிக்கை

இம்பால், ஏப். 22—

மணிப்பூரில் 'சின்' என்னும் மலைவாழிப் பிரிவினர், தங்களுக்குத் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியுள்ளனர்.

'சின்லாந்து' என்ற பெயரில் சுதந்திர நாடு கோரி இவர்கள் ஒரு மெமோரண்டம் தயக்கியுள்ளனர்.

இந்திய, பர்மா, பாகிஸ்தான், ஆசிய முன்று நாடுகளையும் தொட்டுக்கொண்டிருக்கும் பகுதியாகும் இவர்கள் கோரும் தனி நாடு!

ஸ்தவிதமான கிளர்ச்சியை இவர்கள் கடந்தி வருகிறார்கள் என்ற தகவல் கிடைக்கவில்லை.

இந்தியாவிலும், பர்மாவிலும் உள்ள மக்களித்த தலைவர்கள், அரசுகள் நாட்டுத் தலைமையமைச் சருக்கு, 'சின்லாந்து' கோரிக்கை மனுவை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

இக்கக் கோரிக்கையை விளக்கி, மணிப்பூரில் அயிக்கண்டகான புத்தகங்கள் வியோகிக்கப்படு கிறதாம்.

இந்தப் புத்தகங்களில் 'சின்களாக்கக் குறிக்கும் தலைமையும் இணக்கப்பட்டிருக்கிறது.

மணிப்பூர், திரிபுரா, அசாம் ஆகிய மாநிலங்கள் பர்மாவின் அரக்கான் மதியம், மாவிலாகள் சேர்க்த சிட்டான் மலைப் பகுதியும், இக்க புதிய காட்டின் பகுதி களாகச் சேர்க்கப்பட்டுள் ளன.

அசாம் மாகிலத்திலிருக்து இப்புதிய காட்டைக் இணைப் பட்டுள்ள பகுதிகளில், மிசோ குன்றுப் பகுதிகள்— சச்சர் மாவட்டம்—வட சச்சரின் சில பகுதிகள்—மிலர் குன்று கள் ஆகியவை அடங்கின் றன.

இந்தப் பகுதிகளில் சுமார் 5 மில்லியன் சின் மக்கள் வசிக் கின்றனர்.

மிசோ குன்றுகளில் வசிக் கன் 'மிசோக்கள்' என்றும், சச் சார், மணிப்பூர் பகுதிகளில் வசிக்க 'குகி'கள் என்றும் வழங்கப்படுகின்றனர்.

சுவீடன் உரு நன்கொடை

இவ்வாண்டும் கிடைக்கிறது

புதுடில்லி, ஏப். 22—

இந்திய உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய உதவியாக வுள்ள இவ்வாண்டு 14,000 டன் இரசாயன உரத்தை நன்கொடையாகத் தரும்.

சுவீடன் இந்தியாவுக்குத் தரும் இரண்டாவது நன்கொடை இது. முன்பே கடந்த ஆண்டில் சுவீடன் 14,000 டன் உரத்தை நன்கொடையாகத்தந்தது.

விலைகளைச் சமாளித்தியாக வும், அமைதியான முறையிலும் சமாளிக்கும்படி போலீசுக்கும், ராணுவப் படைகளுக்கும் அதி விசிறிருக்கும் மனம்புரி முத லமைச்சர் திரு. கொர்பல் சிங் கூறினார்.

பர்மாவில் ஒரு யூனிட் டும், மணிப்பூரில் ஒரு யூனிட்டுமாக 'சின்லாந்து' தேசிய விடுதலை முன்னணி என்ற வெளிப் உருவாக் கப்பட்டிருப்பதாகவும் கூறப்படு கிறது.

மணிப்பூரில் இயங்கும் யூனி டின் தலைவராக மாட்டில் இருக்கும் ரான்.

மாவிலாகளுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் அளிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

வானொலி

25—4—67 செவ்வாய்

சென்னை-1

416.7 மீ. (720 கி.சை.)

காலை
- 6-00 மங்கள இசை
- 6-05 துதிப்பாடல்கள்
- 6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள்
- 6-35 அருள் வாக்கு
- 6-40 விலைவாசிகள்
- 6-45 இசை அமுதம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 பாட்டு
- 8-45 கீதமஞ்சரி
- 9-15 வீணை
- 9-45 பாட்டு
- 10-30 மதுரகீதம்
- 10-55 ஆங்கிலத்தில் செய்தி
- 11-55 வட்டாரச் செய்திகள்

பகல்
- 12-00 திருச்சி அஞ்சல்
- 12-30 பாட்டு
- 1-00 மாதர் நிகழ்ச்சி
- 1-30 வாத்தியக் குழு
- 1-45 திரை இசை
- 1-55 வானிலை அறிவிப்புகள்
- 2-00 தமிழில் செய்தி

மாலை
- 5-30 வீணை
- 6-00 இடைவேளை
- 6-05 வட்டாரச் செய்திகள்
- 6-15 திரை இசை
- 6-45 தொடர் நாடகம்
- 7-10 இடைவேளை
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 திருச்சி அஞ்சல்
- 8-00 உடைக்கோவை
- 8-30 மெல்லிசை
- 8 45 வாத்திய இசை
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 திருச்சி அஞ்சல்
- 10-30 திரை இசை
- 11-00 நாமாலை
- 11-30 இந்துஸ்தானி இசை

சென்னை-2

211.8 மீ. (1,420 கி.சை.)

காலை
- 6-00 சென்னை 1-ல் உள்ளபடி
- 6-40 ஆங்கிலத்தில் செய்தி
- 6-45 சென்னை 1-ல் உள்ளபடி
- 7-00 தெலுங்கில் செய்தி
- 7-15 இசைமலர்
- 7-30 சென்னை 1-ல் உள்ளபடி
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி
- 11-55 சென்னை 1-ல் உள்ளபடி
- 1-00 ஆங்கில நிகழ்ச்சி
- 1-30 ஆங்கிலத்தில் செய்தி
- 1-40 இந்தியில் செய்தி
- 1-50 தெலுங்கில் செய்தி

மாலை
- 5-30 ஆங்கில நிகழ்ச்சி
- 6-00 ஆங்கிலத்தில் செய்தி
- 6-05 சென்னை 1-ல் உள்ளபடி
- 6-15 இடைவேளை
- 6-20 அறிவிப்புகள்
- 6-45 வாத்திய இசை
- 7-00 தெலுங்கில் செய்தி
- 7-15 தெலுங்கில் பேச்சு
- 7-25 கன்னட நிகழ்ச்சி
- 7-30 கீத் மாலிகா
- 8-00 பாட்டு
- 8-30 டெல்லி அஞ்சல்
- 8-40 இடைவேளை
- 8-45 சென்னை 1-ல் உள்ளபடி
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 செய்திச் சுருள்
- 9-20 டெல்லி அஞ்சல்
- 9-30 ஆங்கில நிகழ்ச்சி
- 10-30 ஆங்கிலத்தில் செய்தி

திருச்சி

319.1 மீ. (940 கி.சை.)

காலை
- 6-30 மங்கள இசை
- 6-40 ஆங்கிலத்தில் செய்தி
- 6-45 ஆங்கிலத்தில் அறிவிப்பு
- 6-50 பக்திப் பாடல்
- 6-55 அறவுரை
- 7-00 துதிப்பாடல்கள்
- 7-10 விலைவாசிகள்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 துதிப்பாடல்கள்
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி
- 8-15 திரை இசை
- 8-30 விளையாட்டரங்கம்
- 11-55 வட்டாரச் செய்திகள்

பகல்
- 12-00 தொழிலாளர்களுக்கு
- 1-00 திரை இசை
- 1-30 ஆங்கிலத்தில் செய்தி
- 1-40 இந்தியில் செய்தி
- 1-50 இசை மஞ்சரி
- [illegible] தமிழில் செய்தி
- [illegible] தனி அறிவிப்புகள்

மாலை
- 5-00 பாட்டு
- 5-30 துதிப் பாடல்கள்
- 6-00 அறிவிப்புகள்
- 6-05 வட்டாரச் செய்திகள்
- 6-15 இடைவேளை
- 6-20 பலகணி
- 6-35 ஊர்ச்சாவடி
- 6-40 வாத்திய இசை
- 6-45 தொடர் நாடகம்
- 7-10 இடைவேளை
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 விவசாயிகளுக்கு
- 8-00 திரை இசை
- 8-30 டெல்லி அஞ்சல்
- 8-40 இடைவேளை
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 சுவாதித் திருநாள்
- 9-30 ஆங்கிலத்தில் செய்தி

பெயரிடு விழா

நம்மாய் — கப்பாலா குன்று தி.மு.க. தோழர் சே. ஆதியம்மா அவர்களின் குழந்தைக்குப் பெயர் சூட்டுவிழா நடந்ததையொட்டி 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 வழங்கினோம்; நன்றி—தோழர் ...னர்.

கோவை மாவட்ட தி.ப.தொ.மு. தொழிற் சங்கச் சாதனைகள்

கோவை சுப்ரீம் ஸ்பின்னர்ஸ் தொழிலாளர்கள் 8 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டது. தொடர்பாகத் தொழிலாளர் அலுவலர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தோழர் காட்டூர் கோபால் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

நடுநிலையாளர் குழுவின் தீர்ப்புக்கு இந்த வழக்கை விடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

பிரகாசா எஞ்சினியரிங்

கோவை பிரகாச எஞ்சினியரிங் தொழிற்சாலையில் வேலையிழந்த சுப்பிரமணியத்தின் வழக்குத் தொடர்பாகத் தொழிலாளர் அலுவலர் எஸ். பி. இராமசாமி முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. காட்டூர் கோபால் கலந்து கொண்டார்.

வேலை இழந்த தொழிலாளருக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

★

திருப்பூர் பகுதி தி. ப. தொ. மு. சங்கம்

தனலட்சுமி ஆலை

திருப்பூர் தனலட்சுமி ஆலை துணைக் குழுத் தேர்தல் 1-4-67-ல் தோழர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா மாலச்சந்த் தலைவராகவும், டி. டி. பெரியசாமி செயலாளராகவும், வி. பழனிச்சாமி துணைச் செயலாளராகவும், ஆறுமுகம் பொருளாளராகவும், ஆறுமுகராசு, மு. இராமசாமி மாவட்டச் சார்பாளர்களாகவும் மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோபால்டு ஆலை

கோபால்டு ஆலை துணைக்குழுத் தேர்தல் 1-4-67-ல் நடைபெற்றது; பழனிசாமி தலைவராகவும், குப்புராசு செயலாளராகவும், கே. கிருட்டினசாமி துணைச் செயலாளராகவும், நடராசன் பொருளாளராகவும், கே. ஆறுமுகம், சுப்பராயன் மாவட்டச் சார்பாளர்களாகவும், மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்

தமிழ்நாடு ஸ்பின்னிங் ஆலை துணைக்குழுத் தேர்தல் [illegible]-4-67-ல் தோழர் சின்னச்சாமி தலைமையில் நடைபெற்றது; கே. கோவிந்தசாமி தலைவராகவும், எம். பழனிச்சாமி செயலாளராகவும், இராக்கியம் துணைச் செயலாளராகவும், கன்னியப்பன் பொருளாளராகவும், கந்தசாமி மாவட்டச் சார்பாளராகவும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காட்டன் மில்

காட்டன் மில் துணைக் குழுத் தேர்தல் 2-4-67-ல், தோழர் இரா. முருகேசன் தலைமையில் நடைபெற்றது; கே. பி. கோவிந்தசாமி தலைவராகவும், ம. சேமு செயலாளராகவும், பி. நாச்சிமுத்து செயலாளராகவும், சின்னச்சாமி, கோவிந்தசாமி மாவட்டச் சார்பாளராகவும், மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டெக்ஸ்டைல் மில்

டெக்ஸ்டைல் துணைக் குழுத் தேர்தல் 2-4-67-ல் தோழர் இரா. முருகேசன் தலைமையில் நடைபெற்றது; வெங்கடாசலம் தலைவராகவும், டி. சுப்பிரமணியம் செயலாளராகவும், முத்து துணைச் செயலாளராகவும், செல்லத்துரை பொருளாளராகவும், பெரியசாமி மாவட்டச் சார்பாளராகவும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எஸ். ஆர். சி. மில்

எஸ். ஆர். சி மில் துணைக் குழுத் தேர்தல் 4-4-67-ல், தோழர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது; இரா. தங்கமுத்து தலைவராகவும், சி. மா. கிருட்டினன் செயலாளராகவும், என். சென்னியப்பன் துணைச் செயலாளராகவும், முத்தசாமி பொருளாளராகவும், இரா. சின்னச்சாமி, சோமயாசுலு மாவட்டச் சார்பாளர்களாகவும், மற்றும் 11-பேர் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கதர் விற்பனையில் முதலிடம்

அறந்தாங்கியில் பரிசளிப்பு

தஞ்சை மாவட்டத்தில் 1966—67-ம் ஆண்டில் கதர் விற்பனையில் முதலிடம் பெற்றதற்காக பரிசளிப்பு விழா, 8-4-67-ல் அறந்தாங்கியில் நடைபெற்றது. உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு எம். முத்துச்சாமி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத் தலைவரும் தி. மு. க. தோழருமான இரா. இராசனிடம் வெள்ளிக் கேடயத்தை அளித்தார்.

நெல்லை மாவட்டத் திராவிட தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

நெல்லை மாவட்டத் திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொது உறுப்பினர் கூட்டம் 16—4—67-ல் நெல்லை சந்திப்பு வணிகர் விடுதியில் திரு. எம். மசுத்தான் தலைமையில் நடைபெற்றது. தோழர் காட்டூர் கோபால் தலைமை வகித்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு விவரம்:—

தலைவர்: காட்டூர் கோபால்; துணைத் தலைவர்கள்: எஸ். கந்தன், பி. தம்பிதுரை; பொதுச் செயலாளர்: மசுத்தான்; துணைச் செயலாளர்கள்: வீ. முருகு, சாகுல் அமீது; பொருளாளர்: ஆறுமுகம்; செயற்குழு உறுப்பினர்கள்:—எம். கே. மாரியப்பன், ஏ. இராமசாமி, ஏ. தாசன், எம். பரமசிவம், என். ரகீம், எம். இராமசுப்பு, எஸ் பாலையா, பி. புல்லையா, கே. எஸ் எஸ் உதுமான், சந்தானம், வி. சண்முகம், எஸ். பேச்சியப்பன், சந்திரன் ஆகியோரும், சட்ட ஆலோசகர்களாக எஸ். இரத்தினவேல் பாண்டியன் பி.ஏ.பி.எல்., ஏ. எல். சுப்பிரமணியம் பி.எஸ்சி. பி.எல்., ஜி. ஆர் எட்மண்ட் பி.ஏ.பி.எல்., எம்.சி., எச். பி. அழகியநம்பி பி.ஏ.பி.எல்.

தோழர் காட்டூர் கோபால் பேசினார்; தோழர் எம். மசுத்தான் நன்றி கூறினார்.

செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகம்

அச்சிறுபாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தமிழாசிரிய கழகத்தின் செயற்குழு 20-4-67-ல் தலைவர் திரு. மு. பி. பாலசுப்பிரமணியம் எம். ஏ. தலைமையில் நடைபெற்றது.

செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தமிழாசிரியர் ஆண்டு விழாவை 30—4—67-ல் அச்சிறுபாக்கத்தில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆண்டு விழாவிற்குத் திறப்பாளராக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவையும், சொற்பொழிவாளராகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியனையும், மற்றும் தமிழறிஞர்களையும் அழைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆண்டு விழாவின் வரவேற்புக் குழுத் தலைவர் மு. பி. பாலசுப்பிரமணியத்தை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரவேற்புக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தஞ்சை மருத்துவ சமூக சவரத் தொழிலாளர் சங்கம்

தஞ்சை நகர மருத்துவ சமூக சவரத் தொழிலாளர் சங்கத்தின் செயற்குழு அமைப்புக் கூட்டம் 9-4-67-ல் திரு. வீரையன் தலைமையில் நடைபெற்றபோது, பொன் வெங்கடாசலம் தலைவராகவும், ஆறுமுகம் துணைத் தலைவராகவும், தங்கையன் செயலாளராகவும், பி சிங்காரம் துணைச் செயலாளராகவும், எம். வீரையன் பொருளாளராகவும், மற்றும் டி. வி. தவமணிராசன், எஸ். இராசு, எஸ். குப்புச்சாமி, எஸ். சாமிநாதன், என். ஏ. மாரிமுத்து ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றிருப்பதை வரவேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை ஆசிரியர்கள் சங்கம்

சென்னை ஆசிரியர்கள் சங்கச் செயற்குழுக் கூட்டம் 10-4-67-ல் திருவல்லிக்கேணி, கெல்லட் உயர்நிலைப்பள்ளியில் கூடியது; தமிழகச் சட்ட மன்ற மேலவை உறுப்பினர் கிருட்டினமூர்த்தி கலந்து கொண்டார். கூட்டத்தில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சென்னை 31-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றப் பொதுக்கூட்டம்

சென்னை 31 வது வட்டம் பெரம்பூர் பெரியசாமியில் எம் ஜி ஆர். மன்றத்தின் சார்பில் 16—4—67-ல் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் த. வளவன் தலைமையில் தோழர் வி. தணிகாசலம் தி. மு. கழகக் கொடி ஏற்றி வைத்தார்.

பெரம்பூர் படேல் சாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. கோவிந்தராசன் தலைமை வகித்தார்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் தோழியர் சத்தியவாணிமுத்து, என். ஏ. அசோகன் பி. ஏ., திருச்சி சௌந்தரராசன், நேசமியன், வி. தணிகாசலம், எம். சி. மு. மாசிலாமணி, கிருட்டினசாமி, மு. கு. வேலாத்திரி, ம. ரா. சீனிவாசன் ஆகியோர் பேசினர்.

தோழர் வளவன் நன்றி கூறினார்.

சென்னை 88-வது வட்ட எம். ஜி. ஆர். படிப்பகம்

சென்னை 88-வது வட்டம் எம். ஜி. ஆர். படிப்பகத்தின் சார்பில் 19—4—67-ல் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் அ. கோ. நாகராசன் தலைமை வகித்தார்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, நடிகமணி டி. வி. நாராயணசாமி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் வ. புருசோத்தமன், பகுதிச் செயலாளர் வை. மாசுந்தரம், வட்டச் செயலாளர் க. இளமதி, தே. க. ஆதிகேசவன், ஸ். வேணு, ஜி. வெள்ளை, லோகநாதன், அரி, ஆகியோர் பேசினர்.

திருவளர்ச்சிப்பட்டியில் கலைஞர் கருணாநிதி மன்றம்—எம். ஜி. ஆர். நூல் நிலையம்

திருவளர்ச்சிப்பட்டியில் தி. மு. கழகத் தோழர்களின் கூட்டம் தோழர் கண்ணையன் தலைமையில் 15—4—67-ல் நடைபெற்றது; அதுபோது, கலைஞர் கருணாநிதி மன்றமும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நூல் நிலையமும் அமைக்கப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விவரம்:—

தலைவர்: எஸ் ஆரோக்கியசாமி; செயலாளர்: அ. சண்முகம்; துணைச்செயலாளர்: ஆர். அம்மாசி; பொருளாளர்: மாரிமுத்து; 12-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பெங்களூர் 38-வது வட்ட எஸ். எஸ். ஆர். மன்றம்

பெங்களூர் 38-வது வட்டம் எஸ். எஸ். ஆர். மன்ற செயற்குழுக் கூட்டம், 12-4-67-ல் தோழர் எம். முனுசாமி தலைமையில் நடைபெற்றது; அதுபோது, கருநாடக மாநிலத் தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர் மாமன்னரின் வாழ்க்கைத்துணைவியார் இயற்கை எய்தியதற்கு மன்றத்தின் சார்பில் இரங்கல் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சென்னை 88-வது வட்ட திருவள்ளுவர் மன்றம்

சென்னை 88-வது வட்ட தி மு கழகச் சார்பு மன்றமாக திருவள்ளுவர் மன்றம் 18—4—67-ல் அத்திப்பேட்டையில் அமைக்கப்பட்டது.

மு. சுப்பிரமணியன் தலைவராகவும், எம் முனுசாமி செயலாளராகவும், எம். பி. வேலன் துணைச் செயலாளராகவும், எம். முத்து பொருளாளராகவும் மற்றும் 9-பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வட்டச் செயலாளர் க. இளமதி ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைத்தார்.

'ஆகாசவாணி' என்று சொல்லாதீர்!

'வானொலி' என்ற சொல்லைப் பயன்படுத்துக!

மத்திய அரசுக்கு அமைச்சர் சத்தியவாணிமுத்து மடல்

திருச்சி, எப். 20—

'ஆகாசவாணி' என்று சொல்வதை நிறுத்தி, 'வானொலி' என்று சொல்லுமாறு தமிழ்நாட்டுச் செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து கோரிக்கை விடுத்துள்ளார்; இதற்கான முயற்சிகளில் அமைச்சர் ஈடுபட்டுள்ளார்.

மத்திய அரசுக்கு இதுபற்றி அமைச்சர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

திருச்சிப் பொதுக்கூட்டத்தில் அவர், இதுபற்றிக் கூறியதாவது:-

"தமிழ் வளர்ச்சியில் நாட்டமுடைய அரசு தமிழகத்தில் பதவியேற்றிருக்கிறது.

எல்லாத் துறைகளிலும் தமிழே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அரசு விழைகிறது. இதன் எதிரொலியாகத்தான் 'தமிழக அரசு' என்று கோட்டையிலும், 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்று அரசு சங்கமங்களிலும் எழுதியிருக்கிறோம்.

செய்தித்துறை அமைச்சர் பொறுப்பினை ஏற்றிருக்கும் நான், ரேடியோவில் 'ஆகாசவாணி' என்று சொல்லுக்குப் பதில் 'வானொலி' என்ற சொல் பயன்படுத்தப்பட வேண்டும் என்று வானொலி நிலைய அதிகாரியிடம் கூறினேன்.

மத்திய அரசுக்கும், டில்லி வானொலி நிலைய அதிகாரிக்கும் இதுபற்றிக் கடிதங்கள் எழுதியுள்ளேன்."

வீரசோழனில் கூட்டணிக் கூட்டம்

வீரசோழனில், தி. மு. க. கூட்டணியின் சார்பில் [illegible] எஸ். என் அகமது முஸ்தபா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்ற முஸ்லிம் லீக் உறுப்பினர் எஸ் எம் செரீப், காரியாபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆர். பெருமாள், இரா. வேலுச்சாமி, எம் ஜமால் மொகைதீன், இரா கிருட்டிணன், முஸ்தபா, ந. பிச்சைமணி, வி. ஏ. ந. பிச்சைமணி, வி. ஏ. சிவன், மாங்குடி மதியழகன், இர சின்னச்சாமி ஆகியோர் பேசினர்.

வத்திராயிருப்புதி மு.க. நன்றியறிவிப்புக் கூட்டம்

வத்திராயிருப்பு தி. மு. க. சார்பில் மார்ச் 30-ல், வாக்காளருக்கு நன்றியறிவிப்புக் கூட்டம் தோழர் அ. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் த ஆ. இராமசாமி, பொ. பிச்சைத்துரை, அப்தாலிப், க. அங்கையா, திருமதி ச. தமிழரசி பி.ஏ. ஆகியோர் பேசினர்.

நசியனூரில் பாராட்டுக் கூட்டம்

ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் மு. சின்னசாமிக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் நசியனூர் தி மு க. சார்பில் 5—4—67—ல் கிராந்தியார் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் பொன்னுசாமி தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் க. அன்பரசு, இராமமூர்த்தி பி.ஏ. பி.எல்., ஆகியோர் பேசினர்.

தோழர் மு. சின்னசாமி பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

நாலூரில் பாராட்டுக் கூட்டம்

காரியாபட்டித்தொகுதி நாலூர் பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆர். பெருமாளுக்குப் பாராட்டுக் கூட்டம் 10—4—67-ல் நடைபெற்றது: திரு செ. சென்னகம் தலைமை வகித்தார். மதுரை மத்திய தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் சி. கோவிந்தராசன், பி. எஸ். இர ம சுப்பிரமணியம் பி ஏ. பி. எல், வி. எம். வேலு, சுந்தரராசன், சமால் மைதீன் ஆகியோர் பேசினர்.

திரு. வெ. பெரியசாமி நன்றி கூறினார்.

பந்தநல்லூரில் பாராட்டுக் கூட்டம்

பந்தநல்லூர் தி.மு.க. சார்பில், சட்டமன்றத் தி.மு.க உறுப்பினர் தோழர் என் கிட்டப்பாவுக்கு 14—4—67-ல் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் என். அசோகன் தலைமை வகித்தார்.

தோழர்கள் கோ.ம. வேலன், என். செல்லதுரை, பி.ஏ. லிங்கன், பொன். தருமன் ஆகியோர் பேசினர்.

தோழர் சிட்டப்பா பாராட்டுதலுக்கு நன்றி கூறினார்.

தோழர் பி ஏ. லிங்கன் நன்றி கூறினார்.

காட்டுப்பாடியில் பாராட்டு விழா

காட்டுப்பாடியில் பாராட்டு விழாப் பொதுக்கூட்டம் தி.மு.க கூட்டணி சார்பில் வ. உ. சி. பூங்கா வெளியில் தோழர் கே. சி வரதராசன் பி.ஏ. தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் ஜி. நடராசன் எம்.எல்.ஏ, பி. செயராமன் எம்.எல்.ஏ., வி. கே. கோதண்டராமன் எம்.எல் ஏ. ஆகியோரைப் பாராட்டி தோழர்கள் பி. கே. முனுசாமி, கே. ஆர். சுந்தரம், இர. நடேசன், டி. ஏ. திருவேங்கடம், பொன்னரசன், சச்சிதானந்தம் ஆகியோர் பேசினர்.

தோழர்கள் ஜி. நடராசன், வி. கே. கோதண்டராமன், பி. செயராமன் ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதை முன்னிட்டு காட்டுப்பாடித் தொகுதியில், இரண்டு நாட்களில் 59 கூட்டங்கள் நடைபெற்றன; தோழர்கள் பி. கே. முனுசாமி, டி. சாம்பசிவம், சீனிவாசமூர்த்தி, கே. பி. சுந்தரம், கன்னியப்பன், சாமிநாதன் முதலியோர் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

பொன்மலையில் கூட்டணித் தோழர்கட்குத் தேனீர் விருந்து

திருச்சி இரண்டாவது தொகுதியில் பணியாற்றிய கூட்டணித் தொண்டர்களுக்குத் தேனீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் தோழர் கோ. கரிகாலன் தலைமையில், 1—4—67-ல், பொன்மலை தமிழ்மன்றப் பணிமனையில் நடைபெற்றது.

தோழர்கள் ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., கோ. இராமானுசம், சி. கண்ணையன், நா. முத்துக்கிருட்டினன், பீர்முகமது, சி. கணேசன் ஆகியோர், தொண்டர்களின் சீரிய பணியை பாராட்டிப் பேசினர்.

சென்னை நகர உணவுப் பங்கீட்டு வணிகர்கள் மத்தியக் குழு

சென்னை நகர உணவுப்பங்கீட்டு வணிகர்கள் மத்திய நடவடிக்கைக் குழுவின் செயற்குழு, 18-4-67-ல் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பி. ஏ. என். இராசரத்தினம் தலைவராகவும், ஜி. வெங்கடேசன், டி. என். மாசிலாமணி, எம். எம். அப்துல் மசீது, எஸ். பழனிசாமி, ஆர். ஏ. சிதம்பரம் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், எஸ். விநாயகம் பொதுச் செயலாளராகவும், எம். சாமுவேல் துரைராசு, ஜி. கிருட்டினமூர்த்தி ஆகியோர் செயலாளர்களாகவும், எம். புண்ணியக்கோட்டி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய் மாதுங்காவில் மாணவர் நிதி

பம்பாய்வாழ் ஏழைத் தமிழ் மாணவர் நிதிக்காக செம்பூர் இளைஞர் நாடக மன்றத்தாரின் 'சினிமா தயாரித்துப் பார்' என்ற நகைச்சுவை நாடகம், 16-4-67-ல் மாதுங்கா போதார் கல்லூரியில், நண்பர் கலை அரங்கத்தின் சார்பில் திரு. எம். எஸ். சுந்தரேசன் தலைமையில் நடைபெற்றது.

திரு. இர. இராசாமணி வரவேற்புரை நிகழ்த்தினார்; திரு. ஏ. ஆர். இராமச்சந்திரன் பேசினார்.

நாடக நிகழ்ச்சியில் எல்லாச் செலவுகளையும் நீக்கிக் கிடைத்த நன்கொடை தொகையான ரூ. 901-ஐ, மாணவர் நிதியுடன் சேர்க்கப்பட்டது.

சுருக்கெழுத்து--தட்டெழுத்து போட்டி

சென்னை-தியாகராயநகர் சுருக்கெழுத்தாளர் கில்டின் ஆண்டு விழாவையொட்டி, மே முதல் வாரத்தில் சுருக்கெழுத்து-தட்டெழுத்தும் போட்டிகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் நடைபெறும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு செயலாளர், சுருக்கெழுத்தாளர் கில்டு, 2, கில்டு தெரு, சென்னை-17' முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு சங்கச் செயலாளர் அறிவிக்கின்றார்.

பாபிரெட்டிப்பட்டி தமிழ் இலக்கிய மன்றம்

பாபிரெட்டிப்பட்டி தமிழ் இலக்கிய மன்றத் துவக்கம், 14-4-67-ல் திரு. எம். இரத்தினம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: எம். இரத்தினம்; துணைத் தலைவர்: பி. வி. இராசா; செயலாளர்: புலவர் கு. வேங்கன்; துணைச் செயலாளர்: தா. குப்புசாமி; பொருளாளர்: புலவர் அ. மு. கண்ணம்மாள்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

பெங்களூர் 55-வது வட்ட நாவலர் மன்றம்

பெங்களூர் பாரதி நகர் நாவலர் மன்ற செயற்குழு அமைப்புக் கூட்டம், 9-4-67-ல் நடைபெற்றது; தாமரைச்செல்வன் தலைவராகவும், ரா. சண்முகம் துணைத் தலைவராகவும், பி. ஜி. கணேசன் செயலாளராகவும், சேரன் துணைச் செயலாளராகவும், வ. லிங்கமூர்த்தி பொருளாளராகவும், மற்றும் இருவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அய்யப்பந்தாங்கலில் அண்ணா படத் திறப்பு

அய்யப்பந்தாங்கலில் ஊராட்சி உறுப்பினர் கே. ஏ. அய்யலு தலைமையில் ஊராட்சிமன்றத்திலும், மகளிர் மன்றத்திலும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி 14—4—67-ல் அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்.

பின்னர், நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எம். கோபால் எம்.எல்.ஏ., அகிலன், வே. பழனி, சர்க்கரவர்த்தி ஆகியோர் பேசினர்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி இறுதியில் உரையாற்றினார்.

திரு. த. ஏ. சந்தோசம் நன்றி கூறினார்.

வைரி செட்டிபாளையத்தில் கிளை நூலக ஆண்டுவிழா

விழாவிற்கு உப்புலியபுரம் அரசு பள்ளித் துணை ஆய்வாளர் எஸ். ஆர். தியோடர் தலைமை வகித்தார்.

உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் எம். அரங்கசாமி பி. ஏ., பி.டி. நோக்கவுரை நிகழ்த்தினார்.

புலவர் சுப். சுப்பரசி, புலவர் அருணா-பொன்னுசாமி ஆகியோர் பேசினர்.

திருவாளர்கள் சி. மாணிக்கம், பா. சரங்கராசன், இராதாகிருட்டிணன் ஆகியோர் நூல்களை நன்முறையில் பயன்படுத்தியதற்காகப் பரிசு பெற்றனர்.

நூலக நிர்வாகி வை. வைத்தி [illegible] நன்றி கூறினார்.

உணர்வோர் உள்ளம்

சங்க காலம் புதுக்கோலம் பூண்டது!

ஐயா,

'தமிழகம்' எனப் பெயர் வைக்க வேண்டும், என உணர்வுமடைத்தவர்கள் கேட்டனர் அன்று!

'தமிழ்ப் பெயர் மிளிரவேண்டும்' என்றனர், தமிழ் நெஞ்சினர் அன்று! 'தமிழாட்சி வேண்டும்' என்றனர், உண்மைத் தமிழ் வழியினர் அன்று!

எல்லாவற்றிற்கும் ஒரே பதில்—'குறுகிய நெஞ்சம் — குருட்டுப் போக்கு—வெறித்தனப் பேச்சு—மொழி ஒரு கருவி — எல்லாம் ஏகம்' என்பதாகவே இருந்தது!

'இழிவு போகாதா? ஏக்கம் தீராதா?' என்று ஏங்கியே இதயங்கள்—தமிழுள்ளங்கள் மகிழ்வுறத் தமிழாட்சி மலர்ந்தது!

மாண்ட பொற்காலம் மீண்டுவிட்டது!

சரித்திரத்தில் இடம் பெற்ற சங்ககாலம் புதுக்கோலம் கொண்டது!

'ஆண்ட தமிழ்' என்ற அவலம் நீங்கி, 'ஆளுந்தமிழ்' என்ற மறுமலர்ச்சி மணம் எழுந்தது!

இளம்பரிதி முந்தான்! தமிழை—தமிழரை—தமிழகத்தைச் சுற்றிச் சூழ்ந்திருந்த 'மொல்லாமை' எனும் பொய்மை இருட்பகைப் போயிற்று!

எங்கும் தமிழ் மணம்! எங்கும் தமிழ் ஒளி! கேட்கும் இடம் எல்லாம் தமிழ் 'ஒலி'!

அப்பப்பா! எத்தனைக்கால ஆவல்-ஏக்கம் நிறைவேறுகிறது!

ஆட்சி மன்றிலும்—அலுவலகங்களிலும்—நீதி மன்றிலும் தமிழ்! தமிழ்!

'கனம்'—'மாண்புமிகு ஆயிற்று'

'சென்னை அரசாங்கம்'—'தமிழக அரசு' ஆயிற்று!

இவற்றிற்கெல்லாம் முன்னோடியாக, அமைச்சர்கள் கொலுவீற்றிருக்கும் கோட்டை, 'தமிழக அரசுத் தலைமைச் செயலகம்' என்று அழைக்கப்படும்!

இத் திருப்பெயரைச் சூட்டி தன்னுரத் தமிழின் தலைமகன் அறிஞர் அண்ணா தமிழொளி காட்டினார்!

புலவர் அரி தேன்னகன்
புதுவை-1

★

தமிழாசிரியர்களின் கோரிக்கைகள்

ஐயா,

தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் சேமப் பாதுகாப்பு வீட்டு வாடகைப் படி—இலவச மருத்துவ உதவி அளிக்கப்படல் வேண்டும்.

தமிழ் வித்துவான் பயின்ற முதன் நிலைத் தகுதிபெற்ற தமிழாசிரியர்கள் அனைவருக்கும், ஆங்கில பட்டம் பெற்று பி. டி. பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு வழங்குவது போன்றுவது ஊதியம் கொடுக்க வேண்டும்.

பல்கலைக் கழகப் பேரவை (செனட்) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆங்கிலப்பட்டதாரிகளுக்குத்தான் இருக்கிறது. தமிழ் வித்துவான்களுக்கும் அவ்வுரிமை வழங்குமாறு பல்கலைக் கழகச் சட்டம் திருத்தப்பெற வேண்டும்.

தமிழே ஆட்சி மொழியாக இருப்பதால், ஐந்தாண்டுகள் தேர்ச்சி பெற்ற முதன் நிலைத் தமிழ் ஆசிரியரான வித்துவான், உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

'தமிழ்—அது எங்கள் உயிர்' எனக்கொண்டு செயலாற்றும் தமிழக அரசு, தமிழாசிரியர்களின் இந்தச் சிக்கல்களை ஆய்ந்து தக்கது செய்யுமென்று நம்புகின்றேன்.

க. கதிரேசன்,
குன்னக்குடி

★

காவலர் அவலநிலை நீங்க ஆவன செய்வீர்!

ஐயா,

காவலர் (போலீசு) குடியிருப்புகளில் ஒரு நாளைக்கு 10 யூனிட் மின்சாரம்தான் பயன்படுத்த வேண்டும் என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாலை 6 மணியிலிருந்து இரவு 8 30 மணி வரைக்கும்தான் விளக்கு வெளிச்சம் இருக்கும்; அதன் பிறகு ஒரே இருள் மயம்தான்.

கடமை முடிந்து இல்லம் திரும்புவர், இரவு 8-30-க்குள் வந்தால்தான் வெளிச்சத்தில் உணவு உண்ண முடியும் இரவில் பூச்சி—பாம்பு போன்றவை வந்து விட்டால் அதோகதிதான்!

படிக்கும் குழந்தைகளோ, சாலையில் உள்ள தெருவிளக்கு வெளிச்சத்தில் படிக்கவேண்டிய நிலை வேறு ஏற்பட்டுள்ளது. தேர்வுக் காலங்களில் காவலர் வீட்டுக் குழந்தைகள்கூடத் தெருவில் வந்து படிக்கவேண்டியிருக்கிறது.

ஆகவே, ஏழைகளின் அரசான தமிழக அரசு, காவலர் இல்லங்களில் எல்லா நேரங்களிலும் மின்சாரம் பயன்படுத்திக்கொள்ள வழி வகுக்குமாறு வேண்டுகிறேன்.

ஒவ்வோர் இல்லத்திலும் தனி 'மீட்டர்' வைத்து, அதற்காகும் செலவை ஊதியத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடப் பிடித்துக் கொள்ளலாம்.

காங்கிரசார் ஆண்டபோது, குடியிருப்பு இல்லங்களில் மராமத்து செய்வதே கிடையாது—சுண்ணாம்பு அடிப்பதைத் தவிர! ஆனால், மராமத்திற்கென நிதி ஒதுக்கப்படுகிறது. காண்ட்ராக்டர்கள் அந்த நிதி கொழுக்க வைத்தது! சில குடியிருப்புகளில் வீட்டுக்குக் கதவுகூடக் கிடையாது!

பொதுப் பணித் துறையினர் இவ்விவகாரத்தில் தனிக் கவனம் செலுத்தி, காண்டிராக்டர்களின் விரும்பத்தகாத செயல்களைக் களைவதற்கும், காவலர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுப்பதற்கும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

க. இளமதி,
சென்னை-18.

சிங்காநல்லூர் நகர தி. மு. கழகக் கூட்டம்

சிங்காநல்லூர் நகர தி. மு. கழகக் கூட்டம், எஸ் பி இராசு தலைமையில் ஒண்டிப்புதூரில் நடைபெற்றது. நகரச் செயலாளர் கோவை. க. இரத்தினம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நகராட்சி விதித்துள்ள வீட்டு வரி பற்றி துணைச் செயலாளர் வி. பி. பழனிசாமி எடுத்துக் கூறினார்.

கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஈரோடு நகர தி. மு. க.

ஈரோடு நகர தி. மு. கழகப் பணிமனை எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் ரோடு, கழகத்தோழர்கள் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்" என்று,நகரச்செயலாளர் ம. ச விசுவநாதன் தெரிவிக்கின்றார்.

ஊத்தங்கரை இலக்கிய மன்ற ஆண்டு விழா

கிருட்டினகிரி வட்டம் ஊத்தங்கரையில் இலக்கிய மன்ற இரண்டாவது ஆண்டு விழா, திரு. சு. மாணிக்கம் தலைமையில் 14—4—67-ல் நடைபெற்றது; திரு. சி. வெங்கடாசலம் வரவேற்றார்.

விழாவில் திருவாளர்கள் தே. வே. சந்தானம், ந. குழந்தைவேல், வித்துவான் திருஞானம், இராமானந்தன், ஆரோக்கியசாமி ஆகியோர் பேசினர்.

திரு. தே. வே. சந்தானம் நன்றி கூறினார்

சென்னை மாணவர் மன்றத் துவக்கப் பள்ளி ஆண்டு விழா

சென்னை மாணவர் மன்றத் துவக்கப் பள்ளியின் ஆண்டு விழாவும்—பெற்றோர் விழாவும் 16—4—67-ல் நடைபெற்றது.

விழாவிற்கு திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்; பள்ளிப் போட்டிகளில் பரிசு பெற்ற சிறுவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

"இரவுப் பள்ளிகள் பல தோன்ற வேண்டும் இதுபோன்ற பொதுச் சங்கங்கள் மூலம் இளைஞர்கள், இரவுப் பள்ளி நடத்தி மக்களுக்குக் கல்வியறிவைப் புகட்ட வேண்டும்" என்று ம. பொ. சிவஞானம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மன்றச் செயலாளர் புலவர் தணிகை உலகநாதன் வரவேற்றார்.

பள்ளியின் ஆட்சிக் குழுவின் அறிக்கையை வல்லை பாலசுப்பிரமணியம் பி.ஏ. சமர்ப்பித்தார்.

பள்ளியின் ஆண்டறிக்கையைப் பள்ளித் தலைமையாசிரியர் திருமதி டி. அங்குராய் வாசித்தார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு எழுத்து வடிவம் கொடுத்து அவர்கள் ஒவ்வொருவராக வந்து நடனம் ஆடிய நிகழ்ச்சி போற்றத்தக்கது.

மன்றச் செயலாளர் பேராசிரியர் அன்புகணபதி எம்.ஏ. நன்றி கூறினார்.

நன்றியறிவிப்பு

3—4—76-ல் உளுந்தூர்ப்பேட்டையில் தம் தந்தையார் சிங்கப்பூர் துரைசாமி (ரெட்டியார்) அவர்களின் உருவச்சிலையினை கடலூர் வழக்கறிஞர் இரா. இளம்வழுதி தலைமையில், தமிழக உணவு அமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் திறந்துவைத்தபோது, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சண்முகம் அவர்கள் சொற்பொழிவாற்றினர். அதுபோது வந்திருந்து சிறப்பித்த அனைவருக்கும், வாழ்த்திய பெருமக்களுக்கும், தம் சார்பிலும், தம் குடும்பத்தின் சார்பிலும் து. இராமையா அவர்கள் தம்முடைய மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறார்.

ஆந்திரத்தில் மதுவிலக்குச் சட்டம் தளருகிறது!

11 மாவட்டங்களில் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்துவதென்று ஆந்திர அரசு முடிவு செய்திருக்கிறது.

இதன் மூலம் ஆந்திர அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2 கோடி கிடைக்குமென்று ஆந்திர மதுவிலக்கு அமைச்சர் சத்தியநாராயணா கூறினார்.

முன்பு ஐதராபாத், சமஸ்தானமாக இருந்து பிறகு ஆந்திராவுடன் இணைக்கப்பட்ட 9 மாவட்டங்களில் மதுவிலக்குச் சட்டம் அமுலில்லாமலிருக்கும்போது, 'ஆந்திராவில் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்த இயலாது' என்று அவர் கூறினார்.

மேலவைத் தேர்தலுக்கு தடை இல்லை

சிவசங்கர மேத்தா மனு உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி

சென்னை ஏப். 22—

சென்னை மாநகராட்சித் தொகுதியிலிருந்து சட்டமன்ற மேலவைக்கு நடைபெறும் தேர்தலைத் தடை செய்ய வேண்டுமென்று முன்னாள் மேயர் சிவசங்கர மேத்தா கொடுத்திருந்த 'ரிட்' அப்பீல் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மேற்படி 'ரிட்' அப்பீல் மனுவும் இடைக்காலத் தடையை நீக்க வேண்டுமென்று தமிழக அரசு சார்பில் செய்யப்பட்ட மனுவும் நீதிபதிகள் சீனிவாசன், பி. இராமகிருஷ்ணன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தன.

அரசாங்க மனுவை ஏற்றுக்கொண்டு இடைக்கால தடையை நீக்கித் தீர்ப்பளித்தனர் நீதிபதிகள்.

அரசாங்கச் சார்பில் அட்வகேட்-ஜெனரல் திரு. கே. நாராயணசாமி முதலியாரும், அவர் உதவியாளர்களும் வாதிட்டனர்.

இத்தொகுதியில் மேலவைக்கு முதலமைச்சர் அண்ணாவும், காங்கிரசு சார்பில் சக்கரபாணி என்பவரும் போட்டியிடுவது தெரிந்ததே.

நகராட்சிகள் வருவாய் பெருக வழி

அமைச்சர் மதியழகன் யோசனை

மதுரை, ஏப். 20—

"திரையரங்குகளையும் பஸ் போக்குவரத்தையும் மின்சார விநியோகிப்பையும் ஏற்று நடத்துவதன் மூலமும், நகராட்சி மன்றங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம்"

என்று, அமைச்சர் கே. ஏ. மதியழகன் கருத்தறிவித்தார்.

மதுரை நகராட்சி மன்றமளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் மதியழகன் பேசுகையில், 'தற்போது நகராட்சிகளின் பொறுப்புகள் மிகுந்துவிட்டன; ஆனால், அந்த அளவுக்கு வருமானம் கூடவில்லையே' என்றார்.

உள்ளாட்சி மன்றங்களின் செயல் திறன்

நாட்டு முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்

திண்டுக்கல் நகராட்சி வரவேற்பில் அமைச்சர் முத்துச்சாமி

திண்டுக்கல், ஏப். 20—

"நகராட்சிகள் ஏற்படுத்தும் சாதனைகளை வைத்தே ஒரு நாட்டின் வளர்ச்சி மதிப்பீடு செய்யப்படும்.

"மக்களின் நல்வாழ்விற்காக உள்ளாட்சி மன்றங்கள் அரும்பாடுபட்டு பணியாற்ற வேண்டும்.

"உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகத்தில் அரசு தலையிடுவது விரும்பத்தக்கதல்ல,

'நான் தி. மு. கழகத்தைச் சார்ந்தவன் என்றாலும், மாற்றுக் கட்சிகளின் பொறுப்பில் இருக்கும் உள்ளாட்சி மன்றங்களோடு ஒத்துழைப்பேன்"

இவ்வாறு அமைச்சர் முத்துச்சாமி திண்டுக்கல் நகராட்சி வரவேற்பில் பேசும்போது குறிப்பிட்டார்.

16 நகராட்சிமன்றப் பள்ளிகளில் பயிலும் 1,200 மாணவர்களுக்கான மதிய உணவளிப்பை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

'தீண்டாமைத் தடுப்புச் சட்டத்தை முன்னைய அரசு சரிவரச் செயல்படுத்தவில்லை'

'உள்ளாட்சிமன்றங்கள் தற்போதைய அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்'

மதுரை நகராட்சி வரவேற்பில் அமைச்சர் சத்தியவாணிமுத்து

"இந்நாட்டில் சிறுபான்மை மக்கள் வறுமையால் வாடுகின்றனர். பல சமுதாய சீர்திருத்தவாதிகளும் அரசியல்வாதிகளும் முயற்சி செய்தும்கூட இன்னும் அந்த வேறுபாடு முற்றிலுமாக நீக்கப்படவில்லை முன்னாலிருந்த அரசு சட்டத்தின்மூலம் முயற்சி செய்தும் அந்த முயற்சி முழு அளவில் வெற்றிபெறவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

"மனித சேவையை மனத்திற்கொண்டு நடத்தப்படும் நகராட்சிப் போன்ற அமைப்புக்கள் 'தீண்டாமை' என்ற அநீதி நீங்கத் துணை செய்ய வேண்டும்"

என்று, தாழ்த்தப்பட்டோர் நலத் துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, மதுரை நகராட்சிமன்றம் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த வரவேற்பு விழாவுக்கு நகராட்சித் தலைவர் திரு. இராமகிருஷ்ணன் தலைமைவகித்து அமைச்சருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

அமைச்சர் மேலும் பேசிய தமது உரையில் மேலும் கூறியதாவது :—

"தி.மு. கழகச் சார்பில் இன்று ஆள்கிற வரிசையில் அங்கம் பெற்றிருக்கிறேன், அதிலும் ஏழை மக்களின் — தாழ்த்தப்பட்ட — பிற்பட்ட மக்களின் நலனைக் கருதி — பெண்கள், குழந்தைகள் நலனைக் கருதி அதற்கான பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

"வரவேற்புரையில் சுகாதார ஊழியர்களுக்குச் சோப்பு, எண்ணெய் வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தது. எண்ணெய் தேய்க்கவும், சோப்புப் போடவும் இன்னும் நாம் கொடுத்துத்தான் செய்ய முடிகிறது. அவர்களே விரும்பிச் செய்யக்கூடிய அளவுக்குப் பொருளாதார முன்னேற்றம் இன்னும் ஏற்படவில்லை; அத்துறையிலும் முன்னேற்றம் ஏற்படவேண்டும்.

"சுகாதார ஊழியர்களுக்கு நகரசபைக் கட்டித் தரும் குடியிருப்பை நகரின் ஒதுக்குப்புறங்களில் அமைத்துத் தரக்கூடாது.

"நகரசபைக்கு இருக்கும் அதிகாரத்தின்மூலம் சாதியின் பெயரால் ஓட்டல்கள் இருக்கவோ, தனிப்பட்ட இல்லங்கள் இருக்கவோ அனுமதிக்கக்கூடாது. வேற்றுமை காட்டக்கூடிய பெயர்ப் பலகையை அமைத்தால் தடுக்கவேண்டும்.

"தீண்டாமையை அகற்ற முன்னாலிருந்த அரசு சட்டங்கள் போட்டது; ஆனால் அதை, 'நிறைவேற்றவில்லை' என்று ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது; அதை நிறைவேற்ற நகரசபைகளும், ஊராட்சிகளும் உதவ வேண்டும்.

"குடியிருப்புக் கட்டுவதற்குப் போதுமான மானியம் தரப்படவில்லை என்று இங்கு கூறப்பட்டது; அதனைத் தரவே அரசு விரும்புகிறது; ஆனால், இன்றைக்கு உள்ள நெருக்கடியான நேரத்தில், அரசுக்கு உணவுப் பிரச்சினைதான் முக்கியமாக இருந்துவருகிறது. மக்களுக்குச் சொன்னபடி ரூபாய்க்கு ஒரு படி அரிசி தரும்வரையில் அமைச்சர்களாக இருப்பதற்கான ஊதியம் பெறாமல் இருக்கிறோம். அந்த அளவுக்கு அப்பிரச்சினையில் முக்கியத்துவம் காண்கிறோம்.

"உணவுப் பிரச்சினையில் செய்யவேண்டியதைச் செய்துவிட்டு, பிறகு இத்துறைகளின் நலன்களுக்கான திட்டங்களுக்கு வருகிற வரவு-செலவுத் திட்டத்திலேயே பணம் ஒதுக்க நினைத்திருக்கிறோம்.

"எதிர்க் கட்சி வரிசையில் இருக்கும்போது எல்லாக் குறைகளையும் நேரில் கண்டு—கேட்டுத் தெரிந்து வைத்துள்ளோம். அதற்கான மாற்றங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறோம்; அப்போது சொன்ன மாற்றங்களை எல்லாம் செய்யவே அரசை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பொதுமக்களும், நகரசபையும் ஆதரவு தரவேண்டும்."

நேர்தல் நேரத்தில் கைதான பேராவூரணித் தோழர்

தண்டனைக்குப் பிறகு விடுதலை

பேராவூரணி, ஏப் 20—

தேர்தல் நேரத்தில் பேராவூரணித் தொகுதியில காங்கிரசாரின் தூண்டுதலின் பேரில் கைது செய்யப்பட்டு மூன்று மாதச் சிறைத் தண்டனை அனுபவித்த கழகத் தோழர் கே. டி. கே. தேவன் 18—4—67-ல் விடுதலையானார்.

தஞ்சை நாடாளுமன்றத்தொகுதியில் தி.மு. கழகத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்ததால், ஆத்திரம் அடைந்த காங்கிரசுக்காரர்கள், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அமைச்சரின் தூண்டுதலினால் கைது செய்யப்பட்டார்.

அத்தொகுதியில் முன்னாள் அமைச்சர் வெங்கட்ராமன் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலின்போது கைதாக்கப்பட்ட தோழர் கே. டி. கே. தேவன், மத்திய சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

இந்திக்காரர்களுக்குத்தான் மத்திய அரசு சொந்தமா?

அடிப்படை உரிமைகளில் மொழிப் பிரச்சினையும் ஒன்றுகும்

'அரசியல் சட்டத்தைத் திருத்தினாலன்றி பிற மொழியினருக்குப் பாதுகாப்பில்லை'— நாடாளுமன்றத்தில் கந்தப்பன் முழக்கம்

"ஆட்சிமொழித் தொடர்பாக இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படாத வரையில், இந்தி பேசாத மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதைக் கடந்தகால வரலாறு, தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. மக்களாட்சி மதிப்புக்கொண்ட எந்த நாடாக இருப்பினும், அந்த நாட்டின் மக்களுக்கு மாற்றமுடியாத—உறுதியான அடிப்படை உரிமைகளை வழங்குதல் வேண்டும்; அந்த அடிப்படை உரிமைகளில் மொழி உரிமையும் ஒன்றுகும்"

என்று மேட்டூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் செ. கந்தப்பன் மக்களவையில் பேசுகையில் கூறினர்.

ஆட்சிமொழித் தொடர்பாக இரா. செழியன் கொண்டுவந்த தனியார் மசோதாவை ஆதரித்து அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

மொழியும் அந்தச் சலுகையைப் பெறுவதில்லை!

திரு. இரா. செழியன் பேசுகையில், 'இந்தி மொழி வளர்ச்சிக்கு நாட்டும் ரூ. 4 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது' என்று குறிப்பிட்டார். அது ஒரு சிறிய தொகை அல்ல!

உறுதியான எடுத்துக்காட்டு ஒன்றைக் கூறவிரும்புகிறேன்.

சீனரும் பாகிஸ்தானியரும் ஆக்கிரமிப்புச் செய்தபோது எனது தொகுதியில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்துவது கைவிடப்பட்டது. அந்த நிலையத்திற்கு 1958-ல் அடிக்கல் நாட்டப்பட்டது; 60,000 கிராமிய மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நிலையம், நிதி இல்லாமல் கைவிடப்பட்டிருக்கிறது!

'சுகாதார நிலையம் தேவை' என்று வற்புறுத்தியபோது, 'போதுமான நிதி இல்லை' என்றுதான் பதில் வந்திருந்தது.:

நிதிப் பற்றுக்குறை உள்ள நாட்டில், இந்திக்காகச் செலவிடப்பட்ட ரூ. 4 கோடியில், ஒரு 500 ஆரம்பச் சுகாதார நிலையங்களை இந்த நாட்டில் ஏற்படுத்தமுடியும்!

நான்கு கோடி ரூபாய் என்பது என்ன—சிறிய தொகையா? அரசாங்கம் இந்த உண்மையை மறைத்துவிட முடியாது!"

"இங்கு திரு. திவாரி பேசும்போது, 'மத்திய அரசு, இந்தி மொழிக்காகப் பணம் செலவிடுகிறது; அதற்குச் சமமாக மாநில அரசுகளும், அவற்றின் தாய்மொழிகளுக்குச் செலவழித்துக்கொள்ளலாம்' என்று குறிப்பிட்டார். இந்த வாதம், சற்று வியப்பாகவே இருக்கிறது!

"இந்தி பேசும் பகுதிகளுக்கே மத்திய அரசு சொந்தமானதோ' என்று எண்ணும் அளவுக்கு அவரது பேச்சு அமைந்திருக்கிறது!

இந்தி மொழி மட்டுமே மத்திய அரசின் கனிப்பை ஏகபோகமாகப் பெறுகிறது! மற்ற எந்த

உணவுத்தானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடு

கோவை, மதுரை மாவட்டங்களில் நீக்கப்படுகிறது

கோவை, ஏப். 21—

கோவை மாவட்டத்தில் உணவுத் தானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடு இன்று முதல் நீங்குகிறது.

ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டத்துத் தானியப் போக்குவரத்துக்கு விதிக்கப்பட்டிருக்கும்கட்டுப்பாடு நீங்கினால்தான் அரிசி விலை குறையும் என வர்த்தகர்கள் தெரிவித்துக் கொண்டதன் பேரிலேயே இந்தக் கட்டுப்பாடு நீக்கப்படுவதாகத் தெரிகிறது.

மதுரை மாவட்டத்தில்

"மதுரை மாவட்டத்தில் மே 15-ம் நாள் முதல் உணவுத் தானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீங்கும்" என்று, உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பல்வேறு வட்டங்களிலும் கொள்முதல் நிலைமையைப் பொறுத்து இந்த ஏற்பாட்டைப் படிப்படியாக நிறைவேற்றுமாறு கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கேரள இடதுசாரி கம்யூனிஸ்டு அமைச்சர்கள்

முழு ஊதியம் பெறுவர்

கேரள இடதுசாரி கம்யூனிஸ்டு அமைச்சர்கள் முழு ஊதியமான ரூ. 800-யும் மாதந்தோறும் பெறுவர்.

தங்கள் செலவு போக எஞ்சிய பணத்தை அவர்கள் கட்சிக்குக் கொடுப்பர்.

இத்தகவலை நிருபர்களிடம் நம்பூதிரிபாடு வெளியிட்டார்.

சென்னை 91-வது வட்டத்தில் புதிய மன்றத் துவக்க விழா

சென்னை 91-வது வட்டம் வரதராசப்பேட்டையில் 23—4—67 காலை 9 மணிக்கு டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றத் துவக்கவிழா நடைபெறும்; தலைவர் : பெ. மோகனப்பா; கொடியேற்றுபவர் : சா. கணேசன் எம்.சி.; மணிமனைத் திறப்பாளர் : மேயர் இரா. சம்பந்தம்; மேயர்ம் கலைத் திறப்பாளர் : மு. சோமசு எம்.எல்.ஏ.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுவோராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, குரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

உள்ளாட்சி அலுவல்களில் பணிமுறையில் மாற்றம்

சட்ட விதிகளைத் திருத்த அமைச்சர் விருப்பம்

சேலம், ஏப். 22—

"தற்போதைய நடைமுறைகளின்படி ஊராட்சி அலுவலர்களின் பணிமுறைகளும் வாழ்க்கைத் தரமும் திருத்தியமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்"

என்று, தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எம். முத்துச்சாமி அவர்கள் கூறினர்.

சேலம் அருகே உள்ள பள்ளிப்பாளையம் ஊராட்சி மன்ற நிகழ்ச்சியில் பங்கேற்க வருகை தந்த அமைச்சருக்கு சேலம் மாவட்ட ஊராட்சி அலுவலர்கள் சங்கச் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பள்ளிப்பாளையம் ஊராட்சித் தலைவர் திரு. இலக்குமணன் தலைமைவகித்தார்; திரு. செயசீலன் வரவேற்றார்; சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ. ஆர். கிருட்டினன், நல்லமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் திரு. எம். முத்துச்சாமி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஊராட்சிப் பணிமுறை தொடர்பாக, தொடர்புடைய பெரும் அலுவலர்களிடம் கலந்து பேசி, சட்ட விதிகளைத் திருத்த வேண்டும்."

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு நிதியுதவி

அமைச்சர்கள் வழங்கினர்

சென்னை—எழும்பூர் பூமதி நகர் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் கருணாநிதி நிதி வழங்கினர்.

இந்த நிதியளிப்பு விழாவில் அமைச்சர் முத்துசாமி, மேயர் இரா. சம்பந்தம், ஏ.வி.பி ஆசைத்தம்பி எம் எல்.ஏ. ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு குடிசைக்கும் ரூ. 25 வீதம் 51 குடிசைகளுக்கு வழங்கப்பட்டது.

புரசைவாக்கம் பெரியார் பாக்கத்தில் ஏற்பட்ட தீ விபத்து நிவாரண நிதியாக 65 குடிசைகளுக்கு ரூ 25 வீதம் அமைச்சர் முத்துசாமி வழங்கினர்

உடனிருந்த அமைச்சர் கருணாநிதி, குடிசைக்கு ரூ. 40 வீதம் அரசாங்க நிதியிலிருந்து வழங்குமாறு கலெக்டரிடம் தெரிவித்தார்.

கடலூர் நகர கழகச் செயலாளரைத் தாக்குவதற்கு முயற்சி

கடலூர் நகர தி. மு. க. செயலாளர் வி. கோவிந்தராசனை, கடலூர் நகராட்சி மன்ற உறுப்பினரான கழக்கடை கோபால் என்பவர் தரக்குறைவாகப் பேசி, சட்டையைப் பிடித்து இழுத்துத் தள்ளியபின் தாக்கவும் முனைந்தார்; உடன், அருகிலிருந்தவர்கள் தடுத்து நிறுத்தினர்.

இது தொடர்பாக, புதுவை வட்ட தி. மு. க. செயலாளர் எம். ஏ. சண்முகம் புகார் செய்ததன் பேரில், போலீசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கருணாநிதி பார்வையிட்டார்

எழும்பூர் இரயில்வே காலனி அருகிலும், கீழ்ப்பாக்கம் பிளவர்ஸ் ரோடிலும் தீவிபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் கருணாநிதி பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினர்.

மக்கள் குறைகளைக் கேட்டு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

நெய்வேலி மின்துறை

எல்லாப் பிரிவுகளும் செயல்படத் தொடங்கிவிட்டன

நெய்வேலி மின்துறையில் ஏழு பிரிவுகள் உள்ளன. எல்லாப் பிரிவுகளும் இப்போது செயல்படுகின்றன.

வேனிற்காலம் முடியும் வரை எல்லாப் பிரிவுகளும் தொடர்ந்து செயல்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மின்சார நிலையத்திற்குத் தேவையான அளவுக்கு இங்கிருந்து மின்சாரம் கிடைக்குமெனத் தெரிகிறது.

அதிக அளவு பழுப்பு நிலக்கரி எடுப்பதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன.

தொழிலாளர் இன்சூரன்சுத் திட்டம்

மேலும் பலருக்கு விரிவுபடுத்தப்படும்

"தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சு வசதி மேலும் அதிக ஊழியர்களுக்கு விரிவுபடுத்தப்படும்"

என்று மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தி கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

'இத்திட்டத்தின்கீழ் 34 இலட்சம் ஊழியர்களுக்கும் அதிகமானவர்கள் பயனடைந்து வருகிறார்கள்; மருத்துவ வசதியை 126 இலட்சம் பேர் அடைந்திருக்கிறார்கள்;

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து 28,700 பேர் இன்ஷூர் செய்யப்பட்டிருக்கிறார்கள்; இன்னும் ஆறு இலட்சம் ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும்.

மாதவரம் பகுதியில் அண்ணா

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், 26—4—67 அன்று மாதவரம் ஊராட்சி ஒன்றிய எல்லையில் மாதவரம் ஒன்றியப் நிகழ்ச்சிகளிலும் பேரூராட்சி மன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளும் விவரம் :—

மாலை 4-15 மணி : எருக்கஞ்சேரி பஞ்சாயத்து சார்பில் வரவேற்பு.

மாலை 5 மணி : மாதவரம் பேரூராட்சி மன்றச் சார்பில் வரவேற்பு.

மாலை 5-30 மணி : மாதவரம் உயர்நிலைப் பள்ளித் திறப்புவிழா.

மாலை 6-30 மணி : புழல் ஊராட்சி மன்ற வரவேற்பு.

மாலை 6-45 மணி : உயர்நிலைப் பள்ளித் திறப்புவிழா.

இரவு 7 மணி : ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா — தேநீர் விருந்து.

இரவு 7-15 மணி : வடகரை மன்றச் சார்பில் வரவேற்பு; ஒன்றியப் பள்ளி ஆண்டுவிழா

இரவு 8-15 மணி : செங்குன்றம் பேரூராட்சி வரவேற்பு.

இரவு 8-30 மணி : உயர்நிலைப் பள்ளித் திறப்புவிழா.

இரவு 8-45 மணி : செங்குன்றம் பேரூராட்சி அலுவலகப் புதிய கட்டிடத் திறப்புவிழா.

[நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்களுடன் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ. பொ. அரசு அவர்களும் கலந்துகொள்வார்.]

பச்சையப்பன் கல்லூரியில் முதலமைச்சர் அண்ணா

இராஜா சர். முத்தையா படத்திறப்பு

சென்னை பச்சையப்பன் கல்லூரியில், அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் இராஜா சர். முத்தையா (செட்டியார்) அவர்களின் உருவப் படத்தை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்து வைப்பார்கள்.

இப்படத்திறப்பு விழா, 25-4-67 மாலை 5-30 மணிக்கு நடைபெறும்.

முதலமைச்சர் அண்ணா

நிகழ்ச்சிகள்

ஏப். 28 காலை 9 மணி : ஆளம்பாக்கம் (திருமணம்); 11 மணி : சாலவாக்கம் ஊராட்சி வரவேற்பு; பிற்பகல் 3 மணி : காஞ்சிபுரம்—வழக்கறிஞர்கள் சங்கக்கூட்டம். மாலை 4 மணி : காஞ்சி சித்த வைத்தியர் சங்க வரவேற்பு; 4-45 மணி : காஞ்சி கூட்டுறவு அச்சக விழா (...ணி ...ர் தெரு); 5-45 சிறுகாவேரிப்பாக்கம் எஞ்சினீயரிங் நிலையத் திறப்பு விழா; 6-45 : காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா; 7-45 ரோட்டரி கிளப் விருந்து (கிருஷ்ணா டாக்கீசு)

காஞ்சிபுரம் சித்த வைத்திய சங்கம்

அண்ணாவுக்கு வரவேற்பு

காஞ்சிபுரம் சித்த வைத்திய சங்கத்தின் சார்பில் 23—4—67 மாலை 4 மணிக்கு தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு — பாராட்டு விருந்து ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் நடைபெறும்; சித்த வைத்தியப் பேராசிரியர்களும், சித்த வைத்தியத்தில் பேரார்வம் கொண்டவர்கள் பலரும் கலந்து கொள்வர்.

அண்ணா தலைமையில் திருமணம்

செங்கற்பட்டு மாவட்டம் ஆளம்பாக்கம் கிராமத்தில், 23—4—67 காலை 9 மணிக்கு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா தலைமையில் அ. முத்து—கண்ணகி; அ. சுந்தரம்—இராசேசுவரி ஆகியோர் திருமணம் நடைபெறும்.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.

குழுக் கூட்ட அறிவிப்பு

"இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம், 27—4—67 பிற்பகல் 2 மணியளவில் பரமக்குடி பயணிவிடுதியில் நடைபெறும்; குழு உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளக் கோருகிறேன்"

என்று, மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு அறிவிக்கிறார்.

நாடக்க இருப்பவை

23—4—67

பெரிய மேலமையூர்

தி.மு.க. சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-மணிக்கு அம்மன் கோயில் அருகில்; தலைவர்: அ. கணபதி; பாராட்டு பெறுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., கொ. கோதண்டம் எம்.எல்.ஏ., பாராட்டுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., தி. ந. சம்பந்தம், செ. ... பலராமன், வ. பசுபதி எ சி., ஏ. ஆர். அன்சாரி எம்.பி., ஆ. விநாயகம் எம்.சி., சி. பி. வேணு, சி. எம். தட்சிணாமூர்த்தி, சு. சுந்தரம். (இரவு 10-மணிக்கு நாடகம் நடைபெறும்).

கொலக்கொம்பை (நீலகிரி)

தி.மு.க. சார்பில் பிற்பகல் 3 மணிக்கு சோ. கருணாநாதன் எம்.எல்.ஏ., போஜன் எம்.எல்.ஏ., நஞ்சா கவுடர் எம்.பி., ஆகியோருக்குப் பாராட்டு; பேசுவோர் இல. சுந்தரேசுவரன், சி. மனோகரன், சி. பி. கிருட்டினையா, க. பேரன்.

24—4—67

மணக்கால்—(அய்யம்பேட்டை)

தி.மு.க. கிளைகள் சார்பில் மாலை 6.மணிக்கு; தலைவர் : வீ. ...கிரிசாமி; பாராட்டு பெறுவோர் : க. சுப்ரவேல் எம்.பி., கிருட்டினமூர்த்தி எம். எல். ஏ., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ. தனுஷ்கோடி எம்.எல்.ஏ., ஞானசுந்தரம் எம்.எல்.ஏ., சோமசுந்தரம் எம்.எல்.ஏ., பாராட்டுவோர் : அ. நடராசன், கே. வி. இராமன், கே. பெரியசாமி, ஆ. மாணிக்கம், பஞ்சநாதன், கண்ணுசாமி, க. நடராசன், சேவியர், திருமதி கிரேசி சேவியர், ச. தெங்கோனன். (மாலை 4.மணிக்கு ஊர்வலம் உண்டு).

சிதம்பரம்

நகர தி.மு.க. சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-மணிக்கு நகரக் கட்டிடத் திடலில் (டவுன் ஆல் மைதானத்தில்); தலைவர் ; தில்லை வில்லாளன் எம்.ஏ., பி.எல்., பாராட்டு பெறுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, எஸ். ஜெ. சாதிக் பாட்சா, வி. மாயவன் எம்.பி., ஆ. கோவிந்தராசு எம்.எல்.ஏ., பாராட்டுவோர் : இரா. சாம்பசிவம், தில்லை மறைமுதல்வன் எம்.ஏ., பி.எல்., ஏ. சி. வைத்திலிங்கம் பி.ஏ.பி.எல்., பொன். சொக்கலிங்கம், கூ. ஆறுமுகம், இரா. க. சீனிவாசன், பரம. நடேசன்.

சென்னை 44-வது வட்டம்

நாகம்மையார் நகர் தி.மு.க. ஆதரவாளர்கள் சார்பில் நன்றியறிவிப்புக் கூட்டம்; மாலை 7 மணிக்கு சோமசுந்தரத் தேவர் 6.வது தெருவில்; தலைவர் சி, முனுசாமி; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., மேயர் இரா. சம்பந்தம், வி. எஸ். கோவிந்தராசன் எம். எல். ஏ., வேலூர் டி. நாராயணன் எம்.ஏ. பி.எல்., எம்.சி., மு. தாமோதரம், இப்ராகிம் பி.ஏ., ச. முத்து, மற்றும் பலர்.

25—4—67

கூத்தாநல்லூர்

தி.மு.க. கிளையின் சார்பில் மாலை 6-மணிக்கு பெரிய கடைத் தெருவில் (வானொலி பூங்கா அருகில்); தலைவர் : மன்னை ப. நாராயணசாமி; பேசுவோர் : கா. இராசா முகம்மது பி.ஏ., பி.எல்., கு. பாலகிருட்டினன், ஏ. எம். ஏ. ரகீம், ஏவி. எச். ஜாபர், சே. ஏ. ஆரிம், எஸ். இ. எச். முகம்மது மொய்தின், ஓ. எம். ஏ. கபீர், கே. எம். ஏ. முகம்மது மொய்தீன்.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

ஏப். 25 : மாலை 4-30 மணி : ஒரக்காட்டுப்பேட்டை — கூட்டுறவுச் சங்கத் திறப்புவிழா; 5 மணி : உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழா; 6-30 மணி : தேசுமுகிப்பேட்டை (திருக்கழுக்குன்றம் அருகில்); இரவு 7 மணி : திருக்கழுக்குன்றம் ஊராட்சி வரவேற்பு; 7-30 மணி : திருக்கழுக்குன்றம் முத்தமிழ் இலக்கிய மன்ற ஆண்டுவிழா.

அமைச்சர்

எம். முத்துச்சாமி

சுற்றுப்பயணம்

ஏப். 24 : இராமநாதபுரம், இராம... வாணியம் பகுதி.

ஏப். 25 : துறையூர், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகள்.

ஏப். 26 ; காலை 8-30 மணி; சேலம்; 10 மணி : பாப்பிரெட்டிபட்டி; மாலை 3 மணி : சேலம்—ஆசிரியர் மாநாடு; 6-30 மணி : ஆ...தூர் — உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழா.